தென்மொழி

உள்ளே...

பற்றி எரியட்டும் தீ

பரிசுச் சீட்டுச்
சூதாட்டத்தை
அரசு முற்றிலும்
கைவிடுக!

தமிழில் பயிற்றுதற்கு
எத்தனைத் தடைக் கல்!

அமெரிக்காவே!
தமிழீழம்
உன் கொல்லைப்புறம்
அன்று!

தென்மொழி அவையக்
கருத்தரங்க உரைகள்

மொழிநலமும்
பொருளியலும்

செத்ததன்று; உயிரற்றது!

நூல் நிறை

செய்திகள்

சூழ்நிலைமை எந்நொடியும் மாறும்!

பெருங்குரலில் தமிழ்வாழ்க என முழங்கிப்
பேரணிகள் ஆர்ப்பாட்டம் அறப்போ ரெல்லாம்
ஒருங்கிணைந்து நடத்தினோம்; 'தமிழை நோக்கின்
உறுபதவி பெரிதன்று யாங்கள் ஆளும்
பெருங்காலம் வரின்நிலைமை மாறும்' என்றோர்
பேச்சின்கண் நம்பிக்கை வைத்தோம் ஆனால்
வருங்காலம் இருள்மயமாய் இருப்ப தெண்ணி
வருந்துகின்றோம் என்றாலும் விடுவோ மில்லை!

ஆங்கிலத்தால் இளஞ்சிறுவர் நெஞ்சமெல்லாம்
அருந்தமிழின் அறிவுணர்வை இழந்தால் என்ன
ஓங்குகின்ற அமெரிக்கா தமிழீழத்தை
ஒழித்துவிட்டால் தானென்ன எம்மை இங்கே
தாங்குகின்ற ஆட்சிநாற் காலிக் கேதும்
தடுமாற்றம் வராதிருந்தால் அதுவே போதும்
பாங்காக வாய்பேசி எல்லாஞ் செய்வோம்
பதைக்காதீர் என்கின்றார் ஆட்சியாளர்!

தில்லியிலே அமர்ந்தாட்சி புரியுமாறு
திடுதிடென வளர்ந்திருப்போர் தம்மைப் பார்த்து
நல்லதமிழ் நலிகின்ற நிலையுந் தென்பால்
நந்தமிழர் அழிவுறுஉம் நிலையுஞ் சொன்னால்
சில்லுண்டித் தனமாகப் படுவதோடு
சீற்றந்தான் அவர்தமக்கு வராதா என்ன
சொல்லொன்று சொல்லிவைப்போம் கேட்பின் நன்று
சூழ்நிலைமை எந்நொடியும் மாறுங் காணீர்!

-இறை

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 29
ஓலை - 11
விலை உரு. 4-00

தி.பி. 2028 நளி (நவம்பர் - 1997)

மீமிசை மாந்தத்தின்
வற்றாத அறிவியல் கூறு!

-பாவலரேறு பெருஞ்சித்திரனார்

இறைமை வெளிப்படுத்திய திருமறைகள் என்று சொல்லப்பெறும் நூல்கள், மாந்தனைப் பற்றி மிகுதியும் பேசுவதில்லை. ஆனால் மாந்தன் ஒருவனால் வெளிப்படுத்தப்பெற்ற ஒரு நூல் இந்த அளவில் மாந்த வியக்கத்தைப் பற்றிப் பேசியிருப்பதை உலகில் எந்த இனத்திலும் எந்த மொழியிலும் எவராலும் காட்டுதற்கு இயலாது. எனவே, இது மீமிசை மாந்தத்தின் வற்றாத அறிவியல் கூறு!

இதுபோலும் ஒரு நூல் உலக மொழிகளுக்கெல்லாம் மூத்ததும் முதலானதும் ஒப்பற்ற இயற்கைத் தன்மை வாய்ந்ததுமான தமிழ்மொழி யில்தான் எழுதப்பெறல் இயலும் என்க. எனவே இதனைத் தமிழ்மொழி யின் ஒரே மலர்ச்சி என்று கூறலாம்.

உலகிலுள்ள மொழிகளில் தோன்றியுள்ள நூல்கள் அனைத்தையும் அவ்வம் மொழி வரிசைப்படுத்தி, 'அவற்றுள் தலைசிறந்ததான, மக்கட்குப் பயன்படும் ஒரே நூலைத் தெரிவு செய்யுங்கள்' என்று அவ்வம் மொழியா ளர்களைக் கேட்டால், அவரவர்களும் அவ்வாறான ஒரு நூலைத் தேர்வதற்கு மிகவும் இடர்ப்பட வேண்டியிருக்கும். அல்லது அவ்வம் மொழியாளர்களுக்குள் பல்வேறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மலைக்க வேண்டியிருக்கும்.

ஆனால், தமிழ்மொழியில் அவ்வாறு தெரிவு செய்யும்படி நேர்ந்தால் அம்மொழியின் ஒரு நூலாகத் திருக்குறளைத் தான் அனைவரும் கருத்து வேறுபாடின்றித் தெரிவுசெய்ய வேண்டியிருக்கும்.

இனி, இது மட்டுமன்று. அவ்வாறு ஒவ்வொரு மொழியிலும் அவ்வம் மொழியினர் தேர்வு செய்யும் ஒவ்வொரு நூலையும் ஒரு வரிசைப்படுத்தி, அவற்றுள் இவ்வுலக மக்களினம் முழுமைக்கும் பயன்படும் ஒரே நூலைத் தெரிவு செய்யும்படி அவ்வம் மொழியின்கண் உள்ள அறிஞர்கள் அனைவரையும் ஒரு சேரக் கேட்டால் அவர்கள் இத் திருக்குறள் ஒன்றைத் தவிர வேறெதையும் தேர்வு செய்ய மாட்டார் என்று உறுதியாகக் கூறலாம்!"

-திருக்குறள் மெய்ப்பொருளுரை

பற்றி எரியட்டும் தீ !

எடுப்பு

பற்றி எரியட்டும் தீ - கொடும்
பார்ப்பனர் நஞ்சைப் பரப்பிய நூல்களில்
பற்றி எரியட்டும் தீ!

தொடுப்பு

சுற்றி எரியட்டும்! சூழ்ந்தே எரியட்டும்!
சூழ்ச்சிகள் வஞ்சங்கள் தாழ்ச்சியின் நூல்களில் (பற்றி)

முடிப்பு

மக்களை வேறு பிரித்தனவாம்; அவை
மடமை வளர்த்தனவாம் - ஒரு
திக்குத் தெரியாமல் மூடமுட் காட்டிலே
திரிய வைத்தனவாம்! - அதனால், (பற்றி)

சிந்தனை கொன்றன வாம்;உயர் வாழ்வினைச்
சீர ழித்தனவாம் - ஒரு
மந்த நினைவினை மயக்க உணர்வினை
மனத்தில் வளர்த்தன வாம்! - அதனால், (பற்றி)

மெய்ம்மையைத் தின்றன வாம்;நல்ல வாழ்க்கையின்
மேன்மை யழித்தனவாம் - பெரும்
பொய்மை பரப்பின வாம்;தமிழ் மக்களின்
பூண்டை அறுத்தனவாம்! - அதனால், (பற்றி)

பண்பை உறிஞ்சின வாம்;நமை யே, இழி
பள்ளத்தில் தள்ளினவாம் - நறுந்
தண்புகழ் சேரும் இலக்கிய நூல்களைத்
தாவி யழித்தன வாம்! - அதனால், (பற்றி)

ஆட்சியைச் சாய்த்தன வாம்;தமி ழர்களின்
ஆளுமை போக்கினவாம் - மொழி
மாட்சியை நீக்கி வடமொழி ஊக்கி, நம்
மானத்தை வாங்கினவாம்! - அதனால், (பற்றி)

நாடு சிதைத்தன வாம்;நமை யேபெரும்
நாயகம் செய்தனவாம் - தமிழ்ப்
பீடு குலைத்திழி 'சூத்திரர்' என்றொரு
பெயரைத் தந்தனவாம்! - அதனால், (பற்றி)

பெண்களைத் தாழ்த்தின வாம்;அருந் தாய்த்தமிழ்ப்
பேற்றை யிழித்தன வாம் - இரு
கண்களை யும்குரு டாக்கி அறியாமைக்
கங்குலில் வீழ்த்தின வாம்! - அதனால், (பற்றி)

வேதம் மனுஇதி காசபு ராணங்கள்
மேவும்பல நூல்கள் - என
வேதியர் ஓதின யாவுமே தீமைகள்!
வெம்மைக் கொடுந் தேள்கள்! - அதனால், (பற்றி)

- பாவலரேறு பெருஞ்சித்திரனார் (29-5-81)

தமிழ் நிலம்

நற்றமிழ் தொடர்பு நடுவம்

கணிப்பொறி வகைப்பட்ட பணிகள்

- ஆய்வு நூல் உதவி
- மருத்துவ இயல், பொறியியல், அறிவியல், தொல்லியல், வரலாற்றியல்
- செய்தித்திரட்டு - சொல்லாக்க உதவி
- அயற்சொல்லிற்கு இணை தமிழ்ச்சொற்கள்
- அறிவியல் சொல் வைப்பகம்
- தூய தமிழ் நூல் வெளியீடு மற்றும் வெளியீட்டு உதவி

முகவரி

12, தொலைபேசி குடியிருப்பு,
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி நகர்,
சென்னை - 600 035

தொலைபேசி : **4337368**
தொலை படிவம்: **044 - 4337368**
மின் அஞ்சல் முகவரி : **thamizh@giasmda.vsnl.net.in**

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(திறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்



நம்முழக்கு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமுழக்கு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

தென்மொழி

மொழி—இனம்—நாடு

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.29) தி.பி. 2028 - நளி (நவம்பா-97) (ஓலை.11

பரிசுச் சீட்டுச் சூதாட்டத்தை அரசு முற்றிலும் கைவிடுக!

பரிசுச் சீட்டுத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தத் தமிழ்நாட்டரசு முடிவுசெய்துள்ளது. பரிசுத் தொகையை அதிகப்படுத்துவதோடு மகிழுந்து, பொறிமிதி முதலிய கவர்ச்சியான பரிசுகளின் மூலம் திட்டத்தை வெற்றி யுறச் செயற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வெளிமாநிலம் பரிசுச் சீட்டு விற்பனையைத் தடைசெய்வதென்றும், ஒற்றை எண், உடனடி சுரண்டல் சீட்டுகள் மீதான தடையைக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் செயற்படுத்துவதென்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவுபற்றி அறிவித்த முதல்வர் கலைஞர் மேற்காணும் தமிழகப் பரிசுச் சீட்டு விரிவாக்கத் திட்டம் பற்றியும் தெரிவித்துள்ளார்.

பரிசுச் சீட்டு என்பது பெயரளவில் நன்று போல் தோன்றினும் நடைமுறையில் அது குருட்டடிச் சீட்டே. (திருஷ்டி - பார்வை. அதிருஷ்டம் - பார்வையற்றது.) குதிரைப் பந்தயம் போல் இக் குருட்டடிச் சீட்டும் ஒருவகைச் சூதாட்டமே என்பதில் ஐயமில்லை.

உழைப்பை ஊக்காமையோடு, மிகச்சிறு முதலீட்டில் குறுகிய காலத்தில் குறுக்கு வழியில் மாபெருஞ் செல்வனாகிவிடலாம் என்று பேராசையை உண்டாக்குவதும், குருட்டடியாகப் பெருந்தொகை பெற்றார் பால் அடுத்தவர்க்கு அழுக்காற்றை ஏற்படுத்துவதும் பெரும்பாலோர் சம்பளம் முழுவதையும் இழந்துங்கூடப் பரிசுபெறாமல் வீணாக ஏக்கங் கொண்டு வினைகெட வழிவகுப்பதுமான இப் பரிசுச் சீட்டை அரசே நடத்துவதனால் அது நல்வினையாகிவிடாது; பல்லாண்டுக் காலமாக வலுவான எதிர்ப்பின்றித் தொடர்ந்தாலும், சட்டத்துக்கு மாறுபடாதது என்றாலும் அது நீண்டகாலத் தீமை என்றும் சட்டப்படி செய்யப்படும் தீங்கு என்றுமே கொள்ளப்படுவதன்றி அவற்றால் அதனை நயன்மைப் படுத்திவிட முடியாது.

'விழுந்தால் வீட்டுக்கு; விழாவிட்டால் நாட்டுக்கு' என்பது அரசின் கவர்ச்சியான விளம்பரமாக இருந்தாலும், பரிசுச் சீட்டு வாங்குவார் யாரும் நாட்டுநலனில் அக்கறையுடையவராக இருத்தல் இயலாது; அரசு அறமில்லாத வழியில் வருமானத்தைப் பெருக்குவதற்கு ஒரு வகையில் உடந்தையாய் இருக்கும் அவர்தம் பேராசையே பின்னிருந்து ஊக்குகிறது.

பிறர் உழைப்பின் பயனை அவர் விருப்பத்துக்கு மாறாக, கவர்ச்சியான விளம்பரங்களின் மூலம் ஆசை காட்டிக் கவர்ந்து கொள்ளும் அரசு, அவ் வருமானத்தைக் கொண்டு எத்தனை நற்பணிகளைச் செய்யினும் என்? கொள்ளையடித்த பொருளைக் கொண்டு அறப் பணிகள் செய்வதற்கும் அரசு செய்யும் அத்தகைய நற்பணிகளுக்கும் என்ன வேறுபாடு? அத்தகைய கொள்ளைக்காரர்களை எப்படிக் குற்றவாளிகள் என்று கூறமுடியும்?

மிகப்பெருஞ் செல்வர்கள் யாரும் இப்பரிசுச் சீட்டை வாங்குவதில்லை. ஏழை, எளியவர்களும் நடுத்தர மக்களுமே குருட்டாம் போக்கில் பெருஞ் செல்வங் கிட்டாதா என்ற அங்காப்பில் தம் சிறுவருவாயையும் இப் பாழுஞ் சீட்டில் பறிகொடுக்கின்றனர்.

இவற்றை யெல்லாம் நன்குணர்ந்து தமிழ்நாட்டரசு இப்பரிசுச் சீட்டை விரிவாக்கம் செய்வதற்கு மாறாகத் திட்டத்தையே முற்றிலும் கைவிடுக!

கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்! (திருக்குறள் 858)

-இறை.

தமிழில் பயிற்றுதற்கு எத்தனை தடைக் கல் !

தொழில்சார் கல்வியைத் தமிழில் பயிற்றுவிக்க இப்போதைய தமிழக அரசு அறிவித்தது. முதலில் பொறியியல் கல்வியைத் தமிழ்வழிக் கற்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. தமிழ்நாட்டில் பரவலாக பல்கலைக் கழகங்களிலும் தன்னாட்சிக் கல்லூரிகளிலும் தமிழில் பொறியியல் பயிற்று விப்பதற்கான ஏற்பாடுகள் மும்முரமாகச் செய்யப்பட்டன. ஆசிரியர்கள் அதற்குத்தகப் பயிற்சிகள் எடுத்துக் கொண்டனர்.

கருத்தியல் கல்வியும் மனப்பாடப் பயிற்சியும்:

பொறியியல் கல்வி மாணவர்கள் அனைவரும் ஆங்கிலப் பயிற்று மொழியிலேயே பள்ளிக்கல்வியை முடித்து வந்தவர்கள் அல்லர். தமிழகத்தில் அனைவரும் நகரத்திலிருந்து படித்து வந்தவர்களும் அல்லர். சிற்றூர்களிலிருந்து வருபவர்களே மிகுதி. ஆங்கிலத்தில் பயின்று வந்தவர்களிலும் மனப்பாடம் செய்து வெற்றி பெற்றவர்களே மிகுந்துள்ளனர். கருத்தியலாகப் படித்து மனத்தில் பதித்தவர்கள் மிகச்சிலராகவே உள்ளனர். சொல்லியலாகப் படித்து எழுதும் ஆற்றல் பெற்றவர்களே வெற்றி பெற்று வந்துள்ளனர். கருத்தியலாகப் படித்தவர்களும் ஆங்கிலத்தில் படித்துத் தமிழில்புரிந்து கொள்பவர் களாகவே வந்துள்ளனர். அவர்களுக்கு நேரடியாகத் தமிழில் படிக்க வாய்ப்பு செய்தால், மிகவும் திறமையாகப் பயிலவும் அவர்களின் தன்னறிவு வளரவும் இக்கல்வி பயனாகும். தன்னறிவு வளர்ந்தால் மட்டுமே மேலைநாட்டு அறிவு, உழைப்பு, மற்றும் முதலாளியச் சுரண்டல்களிலிருந்து நாடு தன்னாட்சி பெறும்.

தமிழில் தொழில்சார் கல்விநூல்கள் அணியம் செய்யப்பட்டு சில வெளிவந்தன. மாணவர்களிடமிருந்து எதிர்பார்த்த அளவிற்கு மேலாக சேர்க்கைப் படிவங்கள் குவிந்தன.

பொதுமக்களிடம் வரவேற்பும் கல்வி நிறுவன ஏற்பாடும் ஆசிரியப் பெருமக்களின் ஆதரவும் நூல்கள் வெளிவந்த நல்ல சூழலும் அமைந்து, தொடங்க வேண்டிய நேரத்தில் தமிழக முதலமைச்சர், ஒரு பொதுக் கூட்ட மேடையில் தமிழில் பொறியியல் பட்டம் படிப்பதற்கு நடுவணரசு இசைவு தரவில்லை என்றும் அடுத்த ஆண்டு அதைப் பெற ஆவன செய்வோம் என்றும் அறிவித்தார்.

தமிழக அரசு தன் தலையாய கொள்கைகளுள் ஒன்றென எடுத்துக் கொண்டதாக அறிவித்த இந்தப் பயிற்றுமொழிச் செய்தியினை ஒரு பொதுக்கூட்டப் பேச்சினில் பேச்சொடு பேச்சாக அறிவித்து விட்டு விட்டார் என்பது இது தொடர்பான முயற்சியில் இறங்கிய அறிஞர்

பெருமக்கள் அனைவர்க்கும் பெருத்த ஏமாற்றமும் வருத்தமும் தரத்தக்கதாக இருந்தது. இதனை இவ்வளவு எளிதாக எடுத்துக் கொண்டதன் வகையில் தமிழக அரசு தன் அக்கறை யின்மையைக் காட்டுகிறதோ என்று ஐயம் எழுந்தது.

இந்திமொழியில் பொறியியல் பட்டம் (?)

தமிழில் பயில்வதால் தமிழ்நாட்டிலேயே தான் பணி தேட முடியும் என்றொரு எண்ணம் உள்ளது. வெளிமாநிலங்களுக்கோ வெளிநாட்டிற்கோ சென்று பணியாற்ற இயலாது என்பதே அவர்களின் தருக்கம். ஒரு செய்தியைக் கருத்தியலாக உள்வாங்கின பிறகு அதைச் செயல்படுத்துவதற்கும், ஏன் எடுத்துரைப்பதற்கும்கூட எந்த தெரிந்த மொழியும் போதும். தமிழில் கற்றவர்கள் ஆங்கிலம் அறியாதவர்கள் அல்லர். 'இந்தியில் அனைத்துக் கல்வியும் கற்கலாம். அது பயிற்றுமொழியாக உள்ளது' என்றெல்லாம் கேள்வியுற்றுள்ளோம். ஆனால் அது மிகவும் தவறானது. இந்திமொழியில் பொறியியல் எங்கும் கற்பிக்கப்படவில்லை.

நாம் நேர்கண்ட பேரா. முனைவர் இளங்கோவன் ஒருமுறை நடுவணரசு தேர்வாணைக் குழு நடுவராக சென்றுள்ளார். அங்கு இந்தி பேசும் மாநிலத்திலிருந்தும் தேர்வுக்காக வந்துள்ளனர். அவர்களை ஆங்கிலத்தில் கேள்வி கேட்ட போது அதற்கு அவர்கள் சரியாக விடையிறுக்க முடியவில்லை. ஒருவேளை அவர்கள் இந்தியில் பயின்றிருப்பாரோ என்று ஐயப்பட்டுக் கேட்டால், அவ்வாறு இந்தியில் எங்கும் பயிற்றுவிக்கப்படுவதில்லை என்று குழுவினர் கூறினார்களாம். அதன்பின் அவர்களை வரைபட வழி விளக்கக் கேட்டால் அவர் மிகவும் புரிந்து விளக்கியிருக்கின்றனர். உண்மையென்ன வென்றால் அவர்கள் தம் தாய்மொழியான இந்தியில் மிகவும் புரிந்து பயின்று ஆங்கிலத்தில் தேர்வு பெற்று வந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. அவர்கள் இந்தியா முழுவதும் பணியமர்த்தப்படுகின்றனர். அது இருக்க தமிழில் பயின்றவர் தமிழ்க் கலைச் சொல்லிற்கு இணையான ஆங்கிலச் சொற்களைக் கட்டாயம் அறிந்திருப்பார். எனவே எந்த மாநிலம் சென்றாலும் அவர் பணியாற்றமுடியும்; அதைப்பற்றிப் பேசமுடியும் என்றே முடிவுகொள்ளலாம்.

மேலும் தமிழக ஆளுங்கட்சியும் பங்கேற்றுள்ள நடுவணரசு இப்போது இசைவு தரவில்லை யென்றால் எப்போது இசைவு கிடைக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரை ஆங்கிலந் தவிர்த்து அவரவர் தாய் மொழியில் கற்பிக்கப்பட்டால் இன்னும் திறனுடன் கற்றுக் கொள்ள முடியும் என்ற அளவில் தமிழகத்தில் இவ்வளவு பெரிய அளவில் விண்ணப்பங்கள் குவிந்துள்ளன என்பதனின்று பொது மக்களின் பரவலான ஆதரவுள்ளது என்பது தெரிகிறது.

அதே நேரத்தில் இந்தி பேசப்படும் மாநிலங்களில் இந்தப் பாடங்கள் முழுவதும் இந்தியிலேயே பயிற்றுவிக்கப்படுவதாக நாம் கேள்வி யுற்றிருந்தோம். எனவே யார் இதற்குத் தடையாக இருக்கிறார்கள் என்றறிய மிகவும் தேடுதலாக இருந்தோம்.

அதற்காக, தமிழ் பயிற்று மொழியில் அக்கறையும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த செயற்பாடும் மிக்க அண்ணாப் பல்கலைக்கழக பேரா. முனைவர் ப.இளங்கோவன் உள்ளிட்ட சிலரை அணுகினோம். அவர்களிடம் இவ்வளவு காலமாக ஆங்கிலத்தில் பயிற்றுவித்துக் கொண்டிருந்த நீங்கள் ஏன் தமிழில் பயிற்றுவிக்க எண்ணம் கொண்டீர்கள்? அதன் தேவைகள் என்ன? இதன் நடவடிக்கை எப்போது தொடங்கியது. இதன் அடுத்து முயற்சி என்ன? என்ற கேள்விகளுடன் அணுகினோம்.

1993 வாக்கில் அண்ணா பல்கலைக் கழகத்தில் நடை பெற்ற அறிவியல் தமிழ்க் கருத்தரங்கு ஒன்றில் தமிழ்ப் பயிற்றுமொழி பற்றிய கலந்தாய்வு நடைபெற்றது. அதில் பல்வேறு கட்டமாகப் பிரித்து தமிழ்ப் பயிற்றுமொழியைப் பின்பற்றுவது தொடர்பாக அலசப்பெற்றிருந்தது. பொறியியலுள்ள பல பிரிவுகளுக்கும் பொதுவான பாடங்களை முதற் கட்டமாக தமிழில் பயிற்றுவிப்பது. அதன்பின் சிறப்பு பாடங்களுக்கும் அதை நடை முறைப்படுத்துவது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. அக்கருத்தரங்கில் பங்கேற்ற அப் போதைய அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் சரியான திட்ட வடிவத்தை முழுமைப்படுத்தி அரசுக்கு அனுப்பக் கூறிச் சென்றுள்ளார்.

பொறுப்பாளர்கள் அவ்வாறே முழுத் திட்டத்தையும் வடிவப்படுத்தி செயலகம் அனுப்பியிருக்கின்றனர். ஆனால் அதைப் பெற்ற கல்விச்

முரண்பட்ட செயல்பாடுகள்

நடுவணரசின் ஏற்பிசைவு பெற்ற இருநிறுவனங்களை எடுத்துக் கொள்வோமேயானால் ஒன்றிற்கொன்று முரண்பாடான செயற்பாடுகளைக் கொண்டனவாகச் செயற்படுகின்றன. தேசியப் பொத்தக நிறுவனம் (National Book Trust) அனைத்துத் துறைக் கல்வி நூல்களையும் அவரவர் தாய்மொழியில் உருவாக்கி அதைப் பரவும்வகை செய்யவேண்டும் என செயற்படுகிறது.

அதேபோல் கல்வித்தரச் சீர்மையை மனதிற் கொண்டு உருவாக்கப்பட்ட அனைத்து இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழு (All India Council for Technical Education) தமிழில் பயிற்றுவித்தால் அனைத்து மொழி யினரும் அவரவர் தாய் மொழியில் பயிற்றுவிக்க உரிமை கேட்பார் என்று தடை கூறியிருப்பது மிகவும் ஒன்றிற்கொன்று முரணாக உள்ளது.

செயுலகம் நாங்கள் கேட்காமல் நீங்களாக முன்வந்து எதற்காக திட்டம் அனுப்பினீர்கள் என்று கேட்டதோடு செயலர்கள் மட்டத்திலேயே இத்திட்டம் நின்றுவிட்டது.

அரசின் தயக்கம் ஏன்?

ஆட்சியாளர்களிடம் சாய்கால் பெற்றவர்களும், அமைச்சர் - அதிகாரிகளின் உறவினர்கள் பலரும் ஆங்கில மழலையர் பள்ளி களுக்கும், ஆங்கிலவழி மேல்நிலைப் பள்ளிகளுக்கும், பொறியியல் கல்லூரிகளுக்கும், மருத்துவக் கல்லூரிகளுக்கும் சொந்தக்காரர்களாக உள்ளனர். இவர்களின் கல்விப்பணி வணிக வகையைச் சார்ந்தது. ஆங்கில மாயையைக் காட்டித்தான் இவர்களின் விளம்பரமே நடை பெறுகிறது. எனவே திடீரென்று அவர்கள் தமிழுக்கு ஆதரவாக மாற முடியாது. வெளிப்படையாக அரசு தமிழ்வழிக் கல்வி என்ற கொள்கை யைக் காட்டினாலும் தம் நெருங்கிய வட்டங்களை முன்னிட்டு கரவாக நடக்க வேண்டிய கட்டாயம் நிலவுகிறது.

அமைச்சர்கள் - அதிகாரிகள் யாரும் தங்கள் மக்களை மாநகராட்சி, அரசு, அரசுசார் தனியார் பள்ளிகளில் சேர்ப்பதில்லை. ஆங்கிலவழி, இந்திவழி - தமிழே பயில வாய்ப்பில்லாத பள்ளிகளிலேயே சேர்க்கின்றனர். தங்கள் மக்களை அங்குச் சேர்த்துவிட்டுப் பொது மக்களைத் தமிழ்வழிக் கல்வியில் சேருங்கள் என்று வெளிப்படையாகத் துணிந்து எவ்வாறு கூற இயலும்.

அத்திட்டம் செயற்படாமலேயே நின்றுவிட்டதால் அண்ணாப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் கருத்துரையின்பேரில் கிழமைக்கு ஒருநாள் அதாவது விடுமுறை நாளான காரிக்கிழமையில், அந்தக் கிழமை நடந்த பாடங்களை புரியும்வண்ணம் தமிழில் நடத்துவது என்ற ஏற்பாடு செய்யப்பட்டது. வகுப்புகளில் புரிந்து கொள்ளாமலும் வெளியில் சொல்லத் தயக்கப்பட்டும் இருக்கும் மாணவர்கள் பலர் அவ்வகுப்புகளில் சேர்ந்திருக்கின்றனர்.

நாளடைவில் மொத்த மாணவர்களிலிருந்து வேறுபாட்டு உணர்வு வளர்ந்ததால் இவ்வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை வரவரக் குறைந்திருக்கிறது. இதற்கிடையில் முகாமையான பாடங்களுக்கு தமிழில் நூல்கள் உருவாக்கத் திட்டமிட்டு நடுவணரசின் தேசியப் பொத்தக நிறுவனத்தை அணுகியுள்ளனர். அந்நிறுவனம் தொகை ஒதுக்கியதன் வழி முதற்கட்டமாக நான்கு பெரும் நூல்களை அழகிய வடிவில் உருவாக்கி யுள்ளனர். ஆங்கில நூல்களுக்கு இணை யாக வும் விலையில் மலிவாகவும் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். மாணவர்கள் பலர் இதைப்பெற்று பயனடைந்து வருகின்றனர்.

இதற்கிடையில் தமிழ்நாட்டில் ஆட்சிமாற்றம் நிகழப்பெற்றுப் பயிற்று மொழிக் கொள்கை அரசின் கொள்கைகளுள் ஒன்றாக எடுத்துக்

கொள்ளப் பட்டது. அதற்கான விரிவான திட்டத்தை அரசு பல்கலைக் கழகத்தில் கேட்டுப் பெற்றது. அதன் இத்திட்டம் தழைத்தோங்கும் என்ற எண்ணத்துடன் அறிஞர்கள் பலரும் மும்முரமாகப் பாடுபட்டனர்.

தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பயிற்றுமொழிக்கான பயிலரங்கு ஒன்று நடத்தப் பெற்றது. அப்பயிலரங்கில் தமிழகத்தின் பல பல்கலைக் கழகப் பேராசிரியர் களும் பொறியியல் கல்லூரிப் பேராசிரியர்களும் பங்கேற்று பயிற்சி பெற்றுக் கொண்டனர். அவர்கள் தமிழ்ப்பயிற்று மொழியில் ஊக்கமும் ஆர்வமும் துணிவும் பெற்றனர். தாய்மொழியில் பயிற்றுவிப்பது உண்மைத் தேவையெனவும் உணர்ந்தனர்.

இதற்கிடையில் அனைத்திந்திய தொழில் நுட்பக்கல்விக் கழக (All India Council for Technical Education)த்திற்கு ஒப்புதல் பெறவேண்டி தமிழகத்தின் மூன்று பல்கலைக்கழகமும் தன்னாட்சிபெற்ற மூன்று கல்லூரிகளும் விண்ணப்பங்களை அனுப்ப அணியமாயின. தமிழக அரசு அவற்றை அரசுப் பரிந் துரையுடன் அனுப்புவதாக அனைத்தையும் தொகுத்து அரசுவழிப் பரிந்துரை மடலுடன் தில்லிக்கு அனுப்பியது.

> **மூன்றாண்டில் பொறியியல் பட்டம்**
>
> பொறியியல் பயிலும் மாணவர்களுக்குப் பயிற்று விப்பதில் மிகவும் பட்டறிவும், தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் கொண்ட பேரா. முனைவர் இளங்கோவன் அவர்களின் ஆய்ந்தெடுத்த கூற்றின் படி, மாணவர்கள் ஆங்கிலத்தில் பத்துப் பக்கங்களைப் பயிலும் நேரத்தில் முப்பது பக்கங்களைத் தமிழில் மிகவும் புரிதலோடு படித்துவிடுகின்றனர். அதனால் மிகவும் விரைவாக தங்களுடைய படிப்பை முடித்துவிடக்கூட முடியும். நான்காண்டு படிப்பை மூன்றாண்டுகளுக்குள் முடித்து அதனினும் திறனாளியாக வரமுடியும்.

அடுத்த கட்டமாக தமிழில் பயில விரும்புவோர்க்கான சேர்க்கைப் படிவமும் வழங்கப்பட்டது. அவை விறுவிறுப்பாக வாங்கப்பட்டு அறுநூறு படிவங்களுக்கு மேல் குவிந்தன. தமிழ் பயிற்றுமொழியால் ஏற்படும் நன்மை தீமைகளை முழுவதாகப் புரிந்துகொள்வதற்கு முன்பே மக்களிடம் உள்ள வரவேற்பு வெளிப்பட இது ஏதுவானது. இவ்வளவுச் சேர்க்கைப் படிவங்கள் முதன் முறையிலேயே வந்தது மிகவும் வியப்பிற்கும் வரவேற்பிற்குமுரியதாகும்.

இவ்வளவு ஏற்பாட்டிற்கும் பின் அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகம் தன் மறுப்பு வினாவைத் தமிழ்நாட்டு அரசிற்குத்

தெரிவித்தது. தமிழைப் பயிற்றுமொழியாக்க இசைவளித்தால் இந்தியாவின் அனைத்து மாநில மொழிகளுக்கும் பயிற்று மொழியாக்க

நடுவக்குழு

அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி நடுவக்குழு (AICT) என்ற குழு, மருத்துவக்குழுவைப் போன்மையாகக் கொண்டது. இந்திய அளவில் அனைத்துக் கல்வியையும் ஒரு சீர்மைக்குக் கொண்டுவரும் நோக்கத்தால் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் மட்டும் பயிற்றப்படும் தோல், நெயவு போன்ற தொழில் நுட்பக்கல்விகளுக்கு வரையறை இங்குள்ள கல்விக்கழகங்கள்தான் செய்யமுடியும். அவ்வாறு ஆங்காங்கு வரைமுறை செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட நடுவக்குழு தான் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி நடுவக்குழு (AICT) இங்குள்ள மாணவர்களுக்குத் தாய்மொழியில் பயிற்றினால் மிகுதியான பயன் விளையும் என்பதை இங்குள்ள மூன்று பல்கலைக்கழகங்களும், தன்னாட்சி கல்லூரிகளும் வரையறை செய்யும்போது அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தருவதுதான் நடுவக்குழுவின் பணி. இக்குழு மறுபடியும் மற்ற மாநிலங்களைக் கேட்பது என்பது பொருந்தாது. என்னவென்று கேட்கும்; யாரைக் கேட்கும்? இது தட்டிக்கழிக்கும் ஏமாற்று வேலையாகவும் இருக்கலாம்.

இசைவு கோரப்படலாம். எனவே மற்ற மாநிலங்களின் கருத்துகளையும் கேட்டபின்பே இசைவு அறிவிக்கப்படும் என்று விடை அனுப்பியதாகத் தமிழ்நாட்டு முதலமைச்சர் தாம் பேசிய கூட்டத்தில் குறிப்பிட்டார். அத்துடன் அந்த முயற்சியை அடுத்த ஆண்டிற்கு ஒத்திப்போடுவதாகவும் அறிவித்து முடித்து விட்டார்.

ஓய்வு பெறுவதற்குள் தொடங்கிவிடுமா?

"என்னைப் போன்ற பேராசிரியர்கள் ஓய்வு பெறும் முன்பே ஒரு பருவ மாணவர்களாவது தமிழ் வழியில் பொறியியல் பட்டம் பெற்று வெளிவருவதைப் பார்த்து விடலாம் என்றிருந்தோம். அந் நிலையும் இப்போது மாறி, நாங்கள் ஓய்வு பெறுவதற்குள் தமிழ்வழி பட்டப்படிப்பு தொடங்கப் பெற்றால்கூடப் போதும் என்ற நிலை உருவாகி விட்டது." என்கிறார் பேரா. முனைவர் இளங்கோவன்.

இந்த ஆண்டின் முயற்சி இந்த அளவில் நின்றுபோனது. இதை மீண்டும் எடுத்துச் செயற்படுத்துவதற்கு எத்தனை சூழ்ச்சிகள், தடைகள் வருமோ என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழை இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக நிறுவுவோம் என்று கூறிப் பதவியேற்ற இந்த அரசு ஆங்கிலவழி மழலையர் பள்ளிகளுக்கு ஏற்பிசைவு வழங்குவதில் வெளிப் படையாக மறுத்தும், கமுக்கமாகப் பின்வாங்கி இசைவு கொடுத்தும் விட்ட இந்தத் தமிழக அரசு பொறியியல் கல்வியைத் தமிழில் பயிற்றுவது தொடர்பான முயற்சியில் எவ்வளவு தொலைவு உண்மையாகவும் அக் கறையாகவும் இருந்து செயற்படுத்தும் என்று தெரியவில்லை. -குன்றன்

அமெரிக்காவே !

தமிழீழம் உன் கொல்லைப் புறமன்று!

தியாகு

அமெரிக்க வல்லாண்மையின் அடாவடித்தனம் இன்று நேற்று தொடங்கியதன்று. 1823ஆம் ஆண்டிலேயே அப்போதைய அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் பெயரில் 'மன்றோ கோட்பாடு' அறிவிக்கப் பட்டது. தென் அமெரிக்கக் கண்டத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் எவ்வகையிலும் தலையிடக் கூடாது, அப்படித் தலையிட்டால் அமெரிக்க ஒன்றிய அரசின் தேசிய நலன்களுக்குக் கேடு செய்ததாகக் கருதப்படும் என்பதே அக்கோட்பாடு. தென் அமெரிக்க நாடுகளை யெல்லாம் அமெரிக்க வல்லாண்மை தன் கொல்லைப்புறமாக அறிவித்துக் கொண்டது என்று பொருள்.

மேய்ச்சல் பரப்பை மேன்மேலும் விரிவாக்கி உலக முழுவதையும் தன் கொல்லைப் புறமாக்கிக் கொள்ளும் முயற்சிதான் நாளது வரையிலுமான அமெரிக்க வல்லாண்மை வரலாறு எனத் தகும்.

முதல் உலகப் போரில் நேரடியாகப் பங்கேற்காமலே மிகப் பெரும் தேட்டை போட்டது அமெரிக்காதான். இரண்டாம் உலகப் போரிலும் ஆள்வகையிலும் பொருள்வகையிலும் ஆகக் குறைந்த செலவில் ஆகப் பெரும் வரவு ஈட்டியது அமெரிக்காதான்.

போர் ஏறத்தாழ முடிந்து விட்ட நிலையிலும் 1945 ஆகத்து 6ஆம் நாளும் 8ஆம் நாளும் கிரோசிமா, நாகசாகி எனும் சப்பானியப் பேரூர்கள் மீது அணுகுண்டு வீசிப் பேரழிவை உண்டு பண்ணியது அமெரிக்க வல்லாண்மை. உலக வரலாற்றில் இதற்கு மேல் கொடுஞ் செயல் வேறொன்றில்லை.

கடந்த ஐம்பதாண்டு காலத்தில் உலகின் எந்நாட்டுப் படையும் அமெரிக்க நாட்டு மண்ணை மிதித்தது கிடையாது. அதே போது அமெரிக்க நாட்டுப் படை உலகின் பல்வேறு நாடுகளிலும் நுழைந் துள்ளது. அமெரிக்க உளவுப் படை நுழையாத நாடே இல்லை எனலாம். உலகமே அமெரிக்காவின் படைக் கலங்களுக்கும் அழிவுக் கருவிகளுக்கும் ஒரு பெருஞ்சந்தை யாக்கப்பட்டுள்ளது.

கொரியா, வியத்துநாம், கியூபா, கிரனாடா, சிலி, நிக்காரகுவா, பனாமா, இராக்கு... இந்தப் பட்டியல் நீண்டு செல்லக்கூடியது - இவையெல்லாம் அமெரிக்காவின் வன்தாக்குதலுக்கு இரையான நாடுகள். 1972-ஆம் ஆண்டு வங்கதேச விடுதலைப் போரின் போது அமெரிக்க வல்லாண்மை அச்சுறுத்தும் நோக்குடன் ஏழாவது கடற்படையை வங்கக் கடலுக்கு ஏவியதைத் தமிழக மக்கள் - இந்திய மக்களும் இந்திய அரசும்கூட - மறவாதிருந்தால் நன்று.

உலகெங்கும் பிற்போக்குக்கும் எதிர்ப்புரட்சிக்கும் பெருங் காவலனாக இருப்பது அமெரிக்க வல்லாண்மைதான். அது தன்னை உலகுக்கே நாட்டாண்மைக்காரனாக எண்ணி இறுமாந்து கிடக்கிறது.

நேரடியாகவும் சுற்றடியாகவும், வெளிப்படையாகவும் உட்படை

யாகவும் எத்தனையோ கொடுஞ்செயல்களை நிகழ்த்தியுள்ள அமெரிக்க வல்லாண்மை இப்போது தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொடுஞ் செயற்கார அமைப்பு (Terrorist Organisation) என்று அறிவித்துத் தடை செய்துள்ளது.

தமிழீழ மக்கள் மீது சிங்களப் பேரினவெறி அரசு தொடுத்துள்ள இனப் படுகொலைப் போரில் இதுவரை ஐம்பதினாயிரத்துக்கு மேற் பட்ட தமிழ் மக்கள் கொலையுண்டிருப்பதும், இன்னும் பன்மடங்கினர் கொடுங்காயமுற்றிருப்பதும், போரின் பேரிடர்களால் அம்மக்கள் சொல்லொணா இன்னலுக்கு ஆளாகி அலைக்கழிவதும் உலகறிந்த செய்தி. நீரில்லை, உணவில்லை, வீடில்லை, மகப்பேற்றுக்கும் ஒரு மறைப்பில்லை, நோய்க்கு மருந்தில்லை, கந்தக நெடி கலவாத காற்றில்லை... உயிருக்கு உறுதிப்பாடு ஒருசிறிதும் இல்லை.

இந்த அவலத்துக்கு அடிகோலிய சிங்களப் பேரினவெறியை எதிர்த்துச் சுண்டுவிரல்கூட அசைக்காத அமெரிக்க வல்லாண்மை சிங்களக் கொலைப் படைக்குப் பயிற்சியளிக்கச் சிறப்புப் படையினரை (பச்சைக் கவிப்பு) அனுப்பியுள்ள செய்தி சில ஆண்டுகளாகவே வந்து கொண்டிருக்கிறது. அமெரிக்கா தானே நேரடியாகவும் இசுரேல் போன்ற துணையரசுகள் வாயிலாகவும் புத்தம் புதிய நுட்பம் பொருந்திய கலங்களையும் கருவிகளையும் சிங்கள இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது.

ஏன்? தமிழீழம் விடுதலை பெறுமானால் அது தெற்காசியாவில் இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களுக்கு ஊக்கமளிப்பதாகி விடும் என்று இந்தியப் பேரரசைப் போலவே அமெரிக்கப் பேரரசும் கணக்கிடுகிறது.தமிழீழ மக்கள் தங்களின் தேசியத் தலைவர் பிரபாகரனின் ஆற்றல் மிக்க தலைமையில் விடுதலை நோக்கி ஏறுநடை பயில்வதை இனியும் கொழும்பு அரசின் கூலிப் படைகளால் தடுத்து நிறுத்த முடியாது என்று தெளிவாகிவிட்டது. விடுதலைப் புலிகளின் வீரஞ்செறிந்த போர் சிங்கள அரசையும் தில்லி அரசையும் போலவே வாசிங்குதன் வல்லரசையும் நடுங்கச் செய்துள்ளது.

வியத்துநாம், கியூபா, தென் ஆப்பிரிக்கா, பாலத்தீனம்... நேற்றும் இன்றுமான விடுதலைச் செம்மலர்க் காடுகளில் இதோ ஈழமும் சேர்ந்து கொள்கிறது. அங்கெல்லாம் தோற்றது போல் இங்கும் வல்லாண்மை மண் கவ்வும், வல்லாண்மைக்கு முட்டுக் கொடுக்கும் அமெரிக்க வல்லரசும் தோற்றோடும்.

கோசிமின்னை, பிடல் காசுற்றோவை, நெல்சன் மண்டேலாவை, யாசர் அராபத்தை ... விடுதலைப் போராளிகளையெல்லாம் கொடுஞ் செயற்காரர்கள் (பயங்கரவாதிகள்) என்று கூறிய அமெரிக்க வல்லாண்மை அகராதியில் ஒரு புதிய பெயர் சேர்க்கப்பட்டுள்ளது: பிரபாகரன்! தம்பி, உனக்கும் பெருமை, எங்களுக்கும் பெருமை!

அமெரிக்க ஓநாயே! தமிழ் ஈழம் உன் வேட்டைக் காடென்று நினைத்தாயோ? வியத்துநாமில் உதைதின்றது போதவில்லையா? தமிழனின் வீரம் எப்படியென்று பார்க்க ஆசையென்றால் காட்ட எம் தோழர்கள் அணியமாய் உள்ளனர்! ▲

தமிழீழத்தில் மக்கள் படுகொலை...
நாம் செய்ய வேண்டுவது என்ன?

தென்மொழி அவையக் கருத்தரங்கம்

தமிழீழத்தில் மக்கட் படுகொலை பற்றிய கருத்தரங்கில் உரையாற்றியோர் கருத்துச் சுருக்கம் வருமாறு:

இறைக்குருவனார் *(தலைமையுரை)*

இலங்கை வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்று அங்கே ஆட்சி யமைக்கும் வாய்ப்புப் பெற்ற சிங்களவர்கள் தமிழர்கள்தம் உரிமைகளைப் பறித்தும் மறுத்தும் இன்னல் இழைக்கத் தொடங்கி விட்டனர். அது நாற்பதாண்டுக் காலத்துக்கு மேலாகப் படிப்படியே வளர்ந்து அங்கே தமிழினப் படுகொலையாக மாறி இன்று அதன் உச்சக் கட்டத்தை எட்டியிருக்கிறது. தமிழீழத்தில் தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டுச் செயல்படுகிறது சிங்கள இனவெறி அரசு. அங்கே அன்றாடம் தமிழ்மக்கள் கொல்லப்படுகிறார்கள். எஞ்சியவர்கள் தாய் நாட்டிலேயே ஏதிலிகளாக அலைகிறார்கள். அஞ்சி அஞ்சி உயிர் வாழ்கிறார்கள்; மிகச்சிலர் அயல்நாடுகளில் புகலிடம் தேடி ஓடுகிறார்கள்.

இவற்றை யெல்லாம் எண்ணுகையில் நம் நெஞ்சம் பதைக்கின்றது. நாம் வாழும் தமிழ்நாட்டில் அரசு இருக்கிறதா, ஆட்சி நடக்கிறதா என்று ஐயுற வேண்டிய நிலையில் இங்கே இருக்கின்ற அரசு இன் வுணர்வற்ற அரசாக, ஈழத்தமிழர்கள் நிலைகுறித்துக் கவலை கொள்ளாத அரசாக இருக்கிறது. ஈழத் தமிழர்களின் இடர்ப்பாடுகள் பற்றிய முழுமையான - உண்மையான செய்திகளை மறைக்கின்ற முயற்சிகள், அவர்கள்பால் மக்களுக்கிருக்கின்ற பரிவுணர்ச்சியை அகற்றிவிடுவதற்கு, எதிர் நிலையாக மாற்றிவிடுவதற்கான முயற்சிகள் இங்கே நடைபெறுகின்றன.

அரசுக்கு இவற்றை யெல்லாம் எடுத்துக் காட்டுவதற்கு, இடித்துக் கூறுவதற்கு முறையான, தகுதிவாய்ந்த இனநல வுணர்வுள்ள எதிர்க் கட்சிகள் இல்லை. இது அரசுக்கு மிகப்பெரிய வல்வாகவும் வாய்ப்பாக வும் இருக்கிறது. அரசுக்கு அறிவுறுத்துகின்ற, அறம் உணர்த்துகின்ற அறிஞர் பெருமக்கள் கழகக்கால வெள்ளைக்குடி நாகனாரைப் போன்ற, கோவூர் கிழாரைப் போன்ற, நம் பாவலரேறு ஐயா அவர்களைப் போன்ற தன்னலமற்ற நெஞ்சுரம் வாய்ந்த புலவர் பெருமக்கள் இன்றில்லை. கடந்த காலத்தில் ஈழத்தமிழர்களுக்காகப் போராட்டங்கள் பல நடத்தியவர் கள், அவற்றில் தம் இயக்கங்களை ஈடுபடுத்தியவர்கள், புத்தியக்கங் கண்டவர்கள் எல்லாம் ஏறத்தாழச் செயலிழந்துவிட்ட நிலையையே

இன்று காணமுடிகிறது. ஆகவேதான் தென்மொழி அவையத்தின் சார்பில் இக்கருத்தரங்கம் கூட்டப்பட்டிருக்கின்றது.

பழ. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்)

தமது இறுதி மூச்சுவரை தமிழர்களுக்காக எழுதி, பேசி, தமது வாழ்நாள் முழுவதையுமே தமிழ்மொழிக்காகவும், தமிழினத்திற்காகவும், தமிழ்நாட்டுக்காகவும் ஒப்புவித்த பாவலரேறு ஐயாவின் தென்மொழி அவையம் இன்று இரண்டு பெரும் சிக்கல்களை எடுத்துக்கொண்டு கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது.

இன்றைக்கு ஈழத்திலே முழுவீச்சாக நடந்துகொண்டிருக்கிற தமிழீழ விடுதலைப் போராட்டமானது உச்சநிலையிலே இருக்கின்ற நேரத்தில் தமிழீழத் தமிழர்கள் கடுமையாகப் படுகொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் படுகொலை நிறுத்தப்படவேண்டும் என்றால் நாம் செய்ய வேண்டுவது என்ன என்ற வகையிலே இங்கே பல்வேறு கருத்துகளை வைத்துள்ளார்கள். இங்கே பேராசிரியர் சச்சிதானந்தம் அவர்கள் சற்று மாறுதலான கோணத்திலே ஒரு செய்தியை சொன்னார்கள். இன்று இந்திய அரசானது சிங்கள அரசுடன் கைகோத்துக் கொண்டு சிங்கள இனவெறித் தாக்குதலுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

காசுமீர் எல்லையோரத்தில் பாகித்தான அரசு வேட்டெஃகத்தால் சுடுகிறது என்று சொல்லி இந்தியப் படைகளை அங்கே நிறுத்தி எதிரடி கொடுக்கிறோம் என்ற பெயரில் கோடிக்கணக்கான பணத்தை செலவழித்துப் பாகித்தான் நாட்டிற்கு எதிராகச் சண்டையிட்டுக் கொண்டுள்ள இந்திய அரசு, இங்கே வேதாரணியம் பகுதியிலே, இராமேசுவரம் பகுதியிலே தமிழக மீனவர் களை நாள்தோறும் சுட்டுக்கொண்டிருக்கும் சிங்கள அரசுக்கு எதிராக ஒரு கண்டனம்கூடத் தெரிவிக்காமல் இருப்பது ஏன்? இங்குள்ள தமிழக அரசானாலும் சரி, அரசியல் கட்சிகளானாலும் சரி சிங்கள அரசின் அத்துமீறலைக் கண்டிப்பதில்லை. ஈழத்தமிழ் இளைஞர்கள் ஒவ்வொரு நாளும் தமக்குச் சாவு உறுதி என்று தெரிந்துகொண்டுதான் போர்க் களத்திலே முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

இங்கே எனக்கு முன்பு பாவலர் இன்குலாபு அவர்கள் சொன்ன ஒரு கருத்திலே நான் சற்று வேறுபடுகிறேன். அதாவது தமிழக அரசியல் கட்சிகள் இந்திய அரசுக்கு அஞ்சிக்கொண்டு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக குரல்கொடுக்காமல் இருக்கின்றன என்று சொன்னதிலே சற்று மாறுபடுகிறேன். இங்குள்ள தமிழக அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் ஓர் அச்சம் உள்ளுக்குள் உண்டு. நாளைத் தமிழீழம் மலர்ந்து அதனைத் தொடர்ந்து தமிழகத்திலே தமிழ்த் தேசியப் போராட்டம் முன்னிலைக்கு வருமானால் அப்போது இங்குள்ள அரசியல் கட்சிகள்-அவற்றின்

தலைவர்கள் அம்பலப்பட்டுப் போவார்கள். அதன்பிறகு இங்குத் தமிழக இளைஞர்கள் தேசிய உணர்வெழுந்து போராடும்போது அது அவர்களுக்கு எதிரான போராட்டமாகவும் இருக்கும் என்பதை அவர்கள் சரியாக உணர்ந்து வைத்துள்ளார்கள். அத்தகையதொரு நிலை தமிழகத்தில் வந்துவிடக்கூடாது என்பதற்காக அஞ்சித்தான் தமிழகத்தில் இருக்கின்ற அரசியல் கட்சிகளும் - கட்சித் தலைவர்களும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுக்கத் தயங்குகிறார்கள். அவர்களுக்கு எதிரான செயல்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

உலகெங்கிலும் இன்று தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இங்கே இருக்கிற ஆறு கோடி தமிழர்கள் அமைதி காத்து இருக்க முடியுமா – ஈழத்தமிழர் போராட்டத்திற்கான ஆதரவு என்பதை வெறும் அரசியல் கட்சிகளுடைய ஆதரவாக நாம் பார்க்காமல் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒட்டுமொத்தத் தமிழகத் தமிழர்களின் ஆறுகோடி தமிழர்களின் ஆதரவாக அதை மாற்றி வளர்த்தெடுக்க வேண்டும்!

பெ. மணியரசன் *(தமிழ்த் தேசியப் பொதுவுடைமைக் கட்சி)*

தமது இறுதி மூச்சடங்கும்வரை தமிழ் - தமிழினம் - தமிழ்நாடு என்ற கொள்கைக்காக விடாது முழங்கிய பாவலரேறு ஐயாவின் அரங்கத்திலே தென்மொழி அவையம் ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கிற தமிழீழத்தில் மக்கள் படுகொலை... நாம் செய்ய வேண்டுவது என்ன?,.... என்ற தலைப்பிலே அமைந்த இந்தக் கருத்தரங்கம் உண்மையிலேயே சரியான நேரத்தில் நடத்தப்படுகின்ற ஒன்றாகும்.

தமிழீழத்தில் நடக்கின்ற படுகொலை என்பது நம் இனத்தின் ஒரு பகுதி அழிக்கப்படுகின்றது என்ற அளவிலும் அவர்களுக்கு ஒரு தனித் தேசியம் தேவை என்கிற சூழலில் போராடுகின்றார்கள் என்ற அளவிலும் தமிழீழ மக்கள் படுகொலையை கண்டிக்கவும் தமிழீழத்தை ஆதரிக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். இந்திய அரசு தமிழகத்தைக் கேட்காமல் தமிழகத்தின் எல்லைகளைச் சுருக்கவோ நீட்டவோ முடியும், தமிழகத்தைக் கேட்காமலேயே கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்க்க முடியும் என்ற நிலைதான் இங்கு இருக்கிறது. அதைப்பற்றிய-நமது தாய்மண்ணைப் பற்றிய அக்கறையோ கவலையோ இங்குள்ள தமிழர்களுக்கு கிடையாது.

ஏற்கெனவே உருவாக்கப்பட்டுத் திறப்புவிழாவிற்குக் காத்திருக்கிற திருவள்ளுவர் சிலையைத் திறக்கவிடாமல் தடுத்து வைத்துக்கொண்டு, தமிழ்நாட்டில் - சென்னையில் கன்னடப் பாவலர் சர்வக்கியர் சிலையைத் திறக்க இசைவு தந்தால்தான் திருவள்ளுவர் சிலையைத் திறக்க இசைவு தருவோம் என்று கன்னட அரசு தந்த வரையறையை ஏற்றுக்கொண்டு வந்திருக்கிற நம் தமிழர்களிடையே இனநலத்திற்கான உணர்ச்சி சிறிதளவும் இல்லை. இப்படியான நிலை இங்கிருக்கும்போது தமிழக மக்கள் அங்கே

படுகொலை செய்யப்படும் தமிழர்களைப் பற்றி அக்கறை கொள்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

இங்குள்ள இந்திய அரசும் இந்திய பார்ப்பனத் தாளிகைகளும் தமிழீழ மக்கள் படுகொலையைச் சிறுமைப் படுத்திச் செய்தி வெளியிட்டு உண்மையை மறைக்கின்ற காரணத்தினால் தான் தமிழர்கள் உணர்ச்சி யற்றுப் போய் இருக்கிறார்கள். ஏதிலிகளாகக்கூட ஈழத்தமிழர்கள் தமிழகத்தில் வரமுடியாத நிலையை உருவாக்கி வைத்துள்ளார்கள். இப்படியான சூழ்நிலையில் நாம் செய்ய வேண்டுவது என்னவென்றால், ஈழத்தமிழ் ஏதிலிகள் இங்கே வருவதற்குத் தடை இருக்கக்கூடாது. இராமேசுரத்திற்கும் தலைமன்னாருக்குமிடையே மீண்டும் கப்பல் போக்குவரத்தைத் தொடங்கவேண்டும். கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையே மீண்டும் சரக்குக் கப்பல் போக்குவரத்தைத் தொடங்கவேண்டும். செங்குறுக்கைக் (Red Cross) கழகத்தின் மருத்துவ உதவிகள் ஈழப்போர்க்களத்தில் செயல்படவேண்டும். தாக்குதலுக்கு ஆளானவர்கள் தமிழர்களாக இருந்தாலும், சிங்களவர்களானாலும் அவர்களுக்கு மருத்துவ உதவிகள் செய்யச் செங்குறுக்கைக் கழகத்திற்கு இசைவளிக்கக் கோரி இந்திய அரசு பன்னாட்டு மன்றத்திலே (U.N.O) குரலெழுப்ப வேண்டும். விடுதலைப்புலிகளுக்கு இந்தியாவில் இருக்கின்ற தடையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து நாம் இங்குப் போராட வேண்டும். அதுதான் உண்மையிலேயே ஈழத்தமிழர் களுக்கு நாம் செய்கின்ற உதவியாகவும் அவர்களுடைய தமிழீழப் போராட்டத்திற்கு வலுச்சேர்ப்பதாகவும் இருக்கும்!

கி.வே. பொன்னையன் (தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி)

தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி என்பது பொதுவான ஒரு நச்சல்பாரி இயக்கம் அன்று. தமிழீழ விடுதலைக்காகவும் தமிழத் தேசிய விடுதலைக்காகவும் தன்னை ஒப்படைத்துக்கொண்டு இந்த மக்களுக்காகப் பாடுபடுகின்ற இயக்கம்தான் தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி ஆகும். அதே வேளையில் தமிழக விடுதலை என்பது தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையோடு இணைக்கப்படாமல் வெற்றி யடைய முடியாது என்பதையும் எங்கள் கட்சியின் அடிப்படைத் திட்டத்திலே வைத்திருக்கிறோம். ஆகையினாலே இங்கேயிருக்கின்ற தோழமை இயக்கங்கள் நமக்குள் உள்ள நட்பு முரண்பாடுகளைப் பெரிது படுத்தாமல் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

•தமிழீழத்தில் மக்கள் படுகொலையை தடுத்து நிறுத்தவல்ல இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கம் ஒன்றுதான். அதற்கு இந்த மண்ணிலே இருக்கிற தடைதான் அவர்களை நெருக்கடிக்குள்ளாகி யிருக்கிறது. அந்தத் தடையை நீக்க வேண்டும். தமிழீழ ஏதிலிகளுக்கு

அடைக்கலம் தந்து அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும். தமிழீழத்திற்கும் தமிழகத்திற்குமிடையே மீண்டும் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க வேண்டும் என்னும் கோரிக்கைகளை வலியுறுத்தி இங்குள்ள குமுகாய ஆற்றல்கள் அனைத்தும் ஒன்றாகக் குரல்கொடுப்பதுதான் தான் நாம் செய்ய வேண்டிய முகாமையான செயலாகும்!

பேராசிரியர் சச்சிதானந்தம் (காந்தளகம்)

நான் இந்த நாட்டுக் குடிமகன் அல்லன் என்றாலும் கடந்த 37 ஆண்டுகளாக இந்த நாட்டில் உங்களோடு வாழ்ந்து வருகிறேன். தமிழீழத்தில் மக்கள் படுகொலை... நாம் செய்ய வேண்டுவது என்ன?, என்பது பற்றிப் பல்வேறு கருத்துகளை இங்கு முன்வைத்தார்கள். நான் சில உண்மைகளை இங்கு வெளிச்சொல்ல விரும்புகிறேன்.

இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை அடைந்து சிங்களவர்கள் கையில் ஆட்சி கிடைத்தபிறகு தமிழர்களுக்கு எதிரான அவர்களுடைய இனவெறித் தாக்குதல் என்பது ஏதோ தமிழீழத்தை அவர்களுடைய நாட்டிலிருந்து பிரிந்துவிடுவதை தடுப்பதற்காக மட்டும் என்று நினைத்து விடாதீர்கள். அவர்களுடைய உண்மையான நோக்கம், அங்குள்ள ஈழத்தமிழர்களின் தடையை முறியடித்துக்கொண்டு அடுத்ததாக அவர்கள் பிடிக்க எண்ணிக் கொண்டிருப்பது தமிழ்நாடு. நான் விளையாட்டாக சொல்கிறேன் என்று யாரும் எண்ணி விடாதீர்கள். தமிழ்நாட்டுக்கு அடுத்து அவர்களுடைய இலக்கு அதற்கடுத்த இந்தியப் பகுதிகளை எல்லாம் பிடிக்கவேண்டும் என்பதுதான். மராட்டியத்திலிருந்து சிவசேனா பால்தாக்கரே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுப்பது என்பதுகூடச் சிங்களவர்களின் இந்த உள் நோக்கத்தைப் புரிந்துகொண்டபிறகுதான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே சிங்கள அரசுக்கு எதிரான ஈழத் தமிழ் மக்களின் போராட்டம் என்பது ஏதோ அவர்களுக் கான போராட்டம் என்பதாக மட்டும் அல்லாமல் அது தமிழக மக்களுக்கு எதிரான, இந்திய நாட்டுக்கு எதிரான சிங்களவர்களின் நாடு பிடிக்கும் கொள்கைக்கு எதிராக நடத்தப்படும் போராட்டம் என்கிற வகையில் நாம் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இரா. பாவாணன் (ம. தி. மு. க)

என்னை ஆளாக்கிய ஐயா பாவலரேறு அவர்களின் தென்மொழி அவையத்திலே நின்று பேசுகிறேன். தமிழீழத்தில் மக்கள் படுகொலை... நாம் செய்ய வேண்டுவது என்ன?, என்னுந் தலைப்பிலே இங்கே கருத்தரங்கம் நடைபெறுகிறது. இங்கே பேசிய பலரும் ஆளுக்கொரு கோணத்தில் இன்னின்ன செய்ய வேண்டும் என்று பேசினார்கள். தமிழீழ மக்கள் படுகொலையை நிறுத்துவதற்குப் பல்வேறு முயற்சிகளைப் பற்றியும் சொன்னார்கள். நான் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

அது தமிழீழத்தில் மக்கள் படுகொலையை நிறுத்த, தமிழீழ மக்களுக்கு ஆதரவாக இப்போதைய சூழலில் இங்குள்ள தமிழர்கள் ஆகிய நாம் ஒன்றுமே செய்ய வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். காரணம் இப்போதைய தமிழீழத்தின் நிலை நாம் உதவிகள் செய்யவேண்டிய நிலையில் இல்லை. அங்குத் தமிழீழம் மலருவதற்கு இன்னும் குறுகிய காலமே தேவைப்படுகிறது. நம் தம்பிகள் கடுமையாகப் போரிட்டு எதிரிகளுக்கு வலுத்த பின்னடைவை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறார் கள். விரைவில் தமிழீழம் மலரப் போகின்ற ஒரு சூழ்நிலையில் நாம் எதையாவது செய்கிறோம் என்று அவர்களுக்கு சிக்கலை உருவாக்கிட வேண்டாம். நாம் எதுவும் செய்யாமல் இருப்பதே நல்லது என்று என்னுடைய கருத்தை முன்வைத்து முடித்துக்கொள்கிறேன்!

பாவலர் இன்குலாபு

கடுமையான இன்னல்களை எதிர்நோக்கியிருக்கும் தமிழீழ மக்களைப் படுகொலை செய்வதற்கு 'வெற்றி உறுதி' என்னும் தாக்குதல்களைச் சிங்கள- சந்திரிகா அரசு நடத்திக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அது தோல்வி உறுதி என்னும் நிலையிலே அங்கே போரிட்டுக் கொண்டிருக்கிறது. அங்கு நடக்கின்ற தமிழீழப் போராட்டத்தின் உண்மையான செய்திகள் நமக்குக் கிடைக்காமல் செய்து அதனையொட்டிய தமிழக எழுச்சியைத் தடுக்கு முகமாக இங்குள்ள பார்ப்பன ஏடுகள் பொய்ச் செய்திகளை பரப்பித் தமிழீழ மக்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபடத் தூண்டும் வகையில் கருத்துகளைப் பரப்பி வருகின்றன. நாம் அவர்களுக்கு எதிராக ஒரு பெரிய கருத்துப் போரை நடத்த வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. அவர்களிடம் இருக்கின்ற செய்தித் தொடர்புக் கருவியங்கள்தாம் நமக்கு எதிரான அவர்களுடைய கருத்துகளை பரப்புவதற்கு வலுவான ஊடகமாக இருக்கிறது. நான் ஆசைப்படுவது ஒரு பேராசை என்பதுபோல இருந்தாலும் நமக்கு ஒரு தொலைக்காட்சி உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்களின் போராட்டங்களை வெளிக்காட்டவும், உணர்வுகளை வெளிப் படுத்தவும் தேவையாக இருக்கிறது. அதுகூட இந்திய எல்லைக்குள் இல்லாமல் வெளிநாட்டில் நம்முடைய கருத்துகளுக்கு கடிவாளம் போடாத ஒருநாட்டில் இருந்துகொண்டு நடத்தவேண்டும். நம்மிடம் இருக்கின்ற தாளிகைகள்கூடப் பொது மக்களைச் சென்றடைய முடியாமல் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் இயங்குபவையாகத்தான் நம்மிடம் இருக்கின்றன. தமிழீழத்தின் விடுதலை என்பது முடிவாகி விட்ட ஒன்று. இந்திய அரசு அதை ஏற்றாலும், ஏற்காவிட்டாலும், எதிர்த்தாலும், எதிர்த்து சிங்கள அரசுக்குத் துணை புரிந்தாலும் தமிழீழ விடுதலை என்ற முடிவாகி விட்ட ஒன்றை அதனால் தடுத்து நிறுத்திவிட முடியாது!

மா. செ. தமிழ்மணி *(உலகத் தமிழன முன்னேற்றக் கழகம்)*

தமிழீழத்தில் மக்கள் படுகொலை முன்னெப்போதையும் விட இன்றைக்கு அதிக அளவில் திட்டமிட்டு நடத்தி வருகிறது, சிங்கள பேரினவெறி அரசு. தமிழீழ மக்கள் உணவின்றி, உடையின்றி, தங்க இடமின்றி, மருத்துவ ஏந்துகள் ஏதுமில்லாமல் கொடுமையான வாழ்வை வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். சிறிதும் இரக்கமில்லாத தமிழக அரசும் இந்திய அரசும் தமிழீழத்திற்கு அனுப்பப்படும் மருந்துகளைக்கூடத் தடை செய்கின்றன. தமிழக மக்கள் தமிழீழ மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பது திசை திருப்பப்படுகிறது. இன்று தமிழக முதல்வராக இருக்கின்ற தமிழினத் தலைவர் என்று அழைக்கப்படுகின்ற கருணாநிதி அரசு, தமிழீழத்தில் அன்றாடம் செத்து மடிகின்ற தமிழர்களுக்கு மருந்துகளையும், உணவுப் பொருட்களையும் அனுப்பாமல் தடை செய்வது ஏன்? உங்களை விடுதலைப்புலிகளுக்கா அனுப்ப சொல்கிறோம்; அங்குள்ள நம்மின மக்களுக்குத் தானே... இது ஒரு மாந்தநேயக் கடமையன்றோ.... அதைச் செய்யாமல் நீங்கள் தமிழினத் தலைவர் என்று சொல்லிக் கொள்வதில் என்ன உண்மை இருக்க முடியும். உங்கள் தடைகளால் எல்லாம் தமிழீழ விடுதலை ஓரீராண்டுகள் தள்ளிப் போகலாமே தவிர முற்றாகத் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதைக் காலம் உங்களுக்கு உணர்த்தத்தான் போகிறது. தமிழீழம் மலரத்தான் போகிறது. அதோடு மட்டுமல்லாமல் இன்று உலகத்தில் தொழிற்றுறையில் முன்னேறியிருக்கும் சப்பானையும், அதற்கு மேல் இருக்கின்ற அமெரிக்காவையும் விஞ்சக்கூடிய அளவுக்கு தமிழீழம் முன்னேற்றப் பாதையில் செல்லத்தான் போகிறது!

இளங்கோவன் *(தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்)*

இங்குள்ள அரசியல் கட்சிகள் அனைத்துமே தம் பதவி நாற்காலிகளுக்காக ஈழத்தமிழர் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டனவே தவிர உண்மையான அக்கறைகொண்டு எந்தக் காலத்திலும் இயங்கியதில்லை. இங்குள்ள இந்திய அரசக் கட்டமைப்பு என்பது எந்த நேரத்திலும், எந்தக் காலத்திலும் ஈழத்தமிழர் போராட்டத்தை ஆதரிக்கும் என்றோ தமிழீழத்திற்கு ஏற்பிசைவு அளிக்கும் என்றோ எண்ணிக் கொள்ள வேண்டியதில்லை. மாறாக, அது தமிழீழப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கும் சிங்களப் பேரினவெறி அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டு ஈழத்தமிழர்களுக்கு எதிரான நிலையிலேயே குள்ளநரித்தன வேலைகளில் ஈடுபடும்.

தமிழீழப் போராட்டம் அனைத்துலகப் பார்வையில் பட்டுப் பேசப் படுகின்ற இந்தச் சூழ்நிலையிலே தமிழீழப் போராட்டத்திற்கான உண்மையான ஆதரவு என்பது, தமிழக விடுதலைப் போராட்டம்தான் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழீழத்தில் எப்பொழு

தெல்லாம் மக்கள் படுகொலை நிகழ்த்தப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் தமிழகத்தில் சாதிக் கலவரங்கள் தூண்டப்படுகின்றன என்று ஒரு கருத்து இன்றைக்கு முன்வைக்கப்படுகிறது. நாம் சற்று மாறாக இதைப் பார்க்கவேண்டும். அதாவது தமிழகத்தில் எப்பொழுதெல்லாம் ஆளுமைச் சாதிவெறியாட்டம் தலைதூக்குகிறதோ அப்பொழுதெல்லாம் தமிழீழத்தில் மக்கள் படுகொலை கட்டவிழ்த்து விடப்படுகிறது. ஆகையினாலே தமிழீழத்திற்கான உண்மையான ஆதரவு என்பது தமிழக ஆளுமைச் சாதிவெறித்தனத்தை அழித்தொழிக்கும் போராட்டம் தமிழக விடுதலைப் போராட்டத்தோடு இணைக்கப்படாதவரை இயலாத ஒன்று என்பதாக நாம் இணைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

புலவர் வடிவேலனார்

இலங்கை விடுதலைபெற்ற நாள்முதல் தமிழீழத்தில் மக்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு அல்லலுற்று வருகின்றனர். தமிழ்மக்கள் அங்கே படுகொலை செய்யப்படுவது தொடர்ந்து நீடிக்கிறது. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்திய அரசியல் கட்சிகளும், கட்சித்தலைவர்களும் இன்று அதைப்பற்றிப் பேசுவதற்குக் கூட அஞ்சுகின்றனர். அன்றைக்கு இருந்த அதே நிலையிலே பழ. நெடுமாறன் போன்ற தலைவர்களும், தென்மொழி அவையத்தைச் சேர்ந்தவர்களுமாகிய ஒரு சிலர்தான் எந்த நிலைக்கும் அஞ்சாமல் தொடர்ந்து ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வருகின்றனர். அந்த வகையிலே தென்மொழி அவையம் சரியான நேரத்திலே இந்தக் கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கிறது.

தேன்மொழியருளியார்

தமிழீழத்திற்கான உண்மையான தீர்வு என்பது தமிழக விடுதலைதான். அந்தத் தமிழக விடுதலை வெற்றிபெற வேண்டுமானால் இந்தத் தமிழினத்திற்கு உண்மையான தலைவர் தேவை. அதுபோன்ற தமிழினத் தலைவர் தமிழகத்தில் இருக்கிறார்களா - என்றால் வருத்தமாகதான் இருக்கிறது. முதலில் தமிழினத்தில் உள்ள இரண்டகர்களைக் களையெடுத்து உண்மையான தலைவர்கள் அடையாளங் காணப்பட வேண்டும். அப்படி, முதலில் தமிழின இரண்டகர்களை களையெடுத்த பிறகுதான் உலகில் எந்த ஒரு இனத்திற்கும் மண்டியிடாத உண்மைத் தலைவனாக, பாவலரேறு ஐயாவால் அடையாளங் காணப்பட்ட ஒற்றைத் தமிழ்மகனாக பிரபாகரன் வரமுடிந்தது என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொண்டு தமிழீழ விடுதலை ஒன்றுதான் தமிழீழ மக்கள் படுகொலைக்கு ஒரே முடிவாக அமையும் என்று கூறி முடிக்கிறேன்.

■

மொழிநலமும் பொருளியலும்

- குமரி மைந்தன் -

[*ஆசிரியர் குறிப்பு:*

தென்மொழி அவையக் கருத்தரங்கில் திரு. குமரிமைந்தன் அவர்கள் ஆற்றிய உரை - விரிவாக்கக் கட்டுரையின் ஒரு பகுதி]

மொழி என்பதும் ஓர் அடையாளமேயன்றி வேறன்று. நம்மை அடிமைப்படுத்த எண்ணுவோர் தம் மொழியையோ பண்பாட்டையோ புகுத்துவதை முதல் நோக்கமாகக் கொள்வதில்லை. பொருளியல் சுரண்டலே அவர்களது அறுதி இலக்கு. நம்மை ஆளவந்த ஆங்கிலர் தங்கள் மொழியும் தமிழும் உறவுடையன என்று கூறினர். அடுத்து சப்பானியன் அதையே கூறுகிறான். இன்று மார்வாடி மொழி வழியில் நட்புக்குக் கை நீட்டுகிறான். தமிழ் வழி மழலையர் பள்ளிகளைப் பா.ச.க. சார்பினர் தொடங்கியது பற்றிய தாளிகைச் செய்திகள் வெளியான பின்னர்தான் தமிழ்த்தேசியர் நடத்தும் பள்ளிகள் பற்றிய செய்தி வெளிவந்தது. திருவள்ளுவர் சமணர் என்று கூறி மார்வாடிகள் தமிழ் பேசும் சமணர்களான நயினார்களைச் சேர்த்துக் கொண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் வள்ளுவர் கோட்டம் அமைத்து வருகின்றனர். நெல்லையிலுள்ள மிகப்பெரிய தாள் விற்பனைக் கடையை நடத்தும் மார்வாடி அதற்கு வைத்திருக்கும் பெயர் தமிழ்நாடு தாள் கடை (பேப்பர் மார்ட்). இவ்வாறு நம் மொழியை இப்போதைக்கு ஏற்றுக் கொள்வதால் அவர்களுக்கு இழப்பு ஏதுமில்லை. ஆனால் மொழியை முதன்மைப் படுத்தி நாம் செய்யும் கருத்துப் பரப்பல் பொதுவாகத் தமிழனை, எதிரிகளை அடையாளம் காண விடாமல் செய்து நண்பர்களாக எண்ணி மயங்க வைக்கிறது. எனவே ஒதுக்கீடு, மொழி என்பனவற்றை அடையாளங்களாகக் கொண்டு அவற்றின் எல்லையை வரையறுக்காமல் அவற்றையே அறுதிக் குறிக்கோளாகக் கொள்ளும் போது நம் குறி தவறிப்போகிறது.

இவ்வாறு கூறும் போது தமிழ்மொழிக்கும் அதன் வளர்ச்சிக்கும் தூய்மைக்கும் நாங்கள் எதிரிகள் என்று முடிவு கட்டிவிட வேண்டாம்.

மொழிக்குச் சிறிதளவு பின்னடைவு வந்தால்கூட அதைச் சரிசெய்து விடலாம். தமிழ் மொழி கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் பலமுறை இது போன்ற பின்னடைவுகளைச் சந்தித்து மீண்டிருக்கிறது. ஊதர்கள் தங்கள் மொழியைக் கால வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டு மீட்டுள்ளனர். மக்கள்கூட வெளிநாடுகளுக்குச் சென்று விட்டால் எஞ்சியுள்ளவர்கள் பெற்றுப் பெருகிக் கொள்ளலாம். ஆனால் நம் மண்ணிலுள்ள ஒருபிடி இரும்புக் கனிமம், நிலக்கரி அல்லது அருமண் பறிபோனால் அந்த

நாம் மீட்க முடியாது. ஈழப் போராளிகள் மாழை மணல் ஏற்றப் பட்ட சினக்கப்பலை மூழ்கடித்துவிட்டுச் சொன்னது நம் கருத்தில் உறைக்க வேண்டும். ஆனால் நம் நாட்டின் மீளப் பெறமுடியாத வளங்கள் கண்மண் தெரியாமல் கொள்ளை போய்க் கொண்டிருப்பதையும் அவ்வாறு அள்ளிக் கொடுப்போருக்கு விருதுகள் வழங்கப்படுவதையும் உணர்ச்சியற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் கொள்ளையை நடத்தும் நிறுவனங்களில் வேலைக்கு ஒதுக்கீடு வேண்டுமென்று தேசியப் போராட்டம் நடத்த அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இன்று தமிழ் ஆட்சி மொழி, பயிற்றுமொழி பற்றிய போராட்டங்கள் முனைப்புற்று வருகின்றன. ஐயத்துக்குரிய வட்டாரங்களிலிருந்தெல்லாம் ஆதரவு பெருகிக் கொண்டிருக்கிறது. இன்றைய அறிவியல் வளர்ச்சி நிலையில் அலுவலர்கள் எம்மொழியிலும் உருவாக்கும் ஆவணங்களை அவற்றைப் பதியும் கருவிகள் அதே நொடியில் தாம் விரும்பும் மொழியில் வழங்க முடியும். அதனால் அவர்களுக்குப் பேரிழப்பேதும் இருக்கப் போவதில்லை. எனவே ஒரு தலைமுறையை உண்மையான தேசியப் பொருளியல் சுரண்டலுக்கெதிரான கவனத்திலிருந்து 'மொழி விடுதலை' என்ற திசையில் திருப்பிவிடும் சூழ்ச்சி இதன் பின்னணியிலிருப்பதாகத் தோன்றுகிறது. வெற்றி போல் தோன்றும் இந்தப் போராட்டம் தேசியப் பொருளியல் கண்ணோட்டத்தில் மாபெரும் தோல்வியை நோக்கித் தமிழகத்தை இழுத்துச் செல்லும் வாய்ப்பிருக்கிறது. மொழி முதன்மைக் கோட்பாட்டினர் இதனை ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

"ஒரு மக்களினத்தை அழிக்க அம்மக்களின் மொழியை அழித்துவிடு" என்று யாரோ சொன்ன கூற்றை மேற்கொள்வது மொழி முதன்மைக் கோட்பாட்டினரின் வழக்கம். ஆனால் அது சரியான கூற்றன்று.

கி.பி. 4ஆம் நூற்றாண்டில் உரோமப் பேரரசு கிறித்தவத்தை அரசு மதமாக ஏற்றுக் கொண்டது. உடனே ஏசுவைக் கொன்றவர்களென்ற குற்றச் சாட்டின் பேரில் இசுரேல் மீது ஒருபெரும் தாக்குதல் நடத்தியது. ஊதர்கள் உலக மெங்கும் சிதறி ஓடினர். தங்கள் மொழியை அவர்களால் பேண முடியவில்லை. ஆனால் சென்ற விடங்களிலெல்லாம் பெருஞ் செல்வர்களாகத் தங்களை வளர்த்துக் கொண்டனர். அதனால் அவர்கள் சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாயினும் இந்நூற்றாண்டில் தங்கள் செல்வ வலிமையால் தங்கள் தாய் மண்ணை விலை கொடுத்து வாங்கியும் உலக வல்லரசுகளின் சாய்கால்ப் பெற்றும் தாய் மண்ணுக்குத் திரும்பித் தங்கள் தாய்மொழியுடன் இழந்த அனைத்தையும் மீட்டுக் கொண்டனர்.

பல நூற்றாண்டுகளால் வெளியிலிருந்து வந்து நம்மை ஆண்ட முகமதியர்கள்; ஆங்கிலேயேர்களால் இடைவிடாமல் நம் நாடு சுரண்டப் பட்டதாலும் அதற்கு முந்திய உள்நாட்டுச் சுரண்டல்களாலும் வறுமைப்

தொடர்ச்சி 29 -ஆம் பக்கம்

செத்ததன்று; உயிரற்றது!

-புலவர் கடுங்கோ-

சமற்கிருதம் தேவபாடை என்றுகூறி வழிபாட்டின் மூலமும், வாழ்வியற் சடங்குகள் வாயிலாகவும் ஆட்சியாளர்களையும் நாட்டு மக்களையும் பல்லாயிரம் ஆண்டுகளாக ஏமாற்றி வாழ்ந்து கனங் கண்டவர்கள், அது சற்றுத் தேய்மானங் காணும் இன்றைய நிலையில் சமற்கிருதம் 'சிறுபான்மையினர் மொழி' என்று கூறி அதன் மூலமும் அரசுச் சலுகைகளைச் சுருட்டத் திட்டமிட்டுச் செயலில் இறங்கி யுள்ளனர்.

தம் நோக்கமாவன சமற்கிருதத்தை வளர்ப்பதும், அதன் சிறப்பைப் போற்றுவதுமே என்று கூறித் தமக்குள் கைகோத்து நிற்கும் அவர்களுட் சிலர் அம்மொழி இன்று பேச்சு வழக்கில் இல்லை என்பதை எதிர்த்துக் குரலெழுப்பவும் துணிந்துவிட்டனர்.

சமற்கிருதம் உயிருடன் உலவுவதாக நாட்டப் புகுந்து, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் அம்மொழி அறிக்கைகள் இடம் பெறுவதையும், சமற்கிருதப் பண்டிதர்கட்குக் குடியரசுத் தலைவர் விருது வழங்கப்படுவதையும் சுட்டிக் காட்டி, பள்ளிக்கூடங்களில் அம் மொழியைக் கட்டாயப் பாடமாக்குவது குறித்துச் சட்ட முன்வடிவு அறிமுகமாவதாகவுங் கூறியுள்ள 'அவர்கள்' இவ்வாறு பல்வேறு துறை களிலும் இடம்பெற்றுள்ள சமற்கிருதத்தைப் பேச்சு வழக்குடையதாகவே கொள்ள வேண்டும்; சொல்ல வேண்டும் என்று வழக்காடுகின்றனர்.

சமற்கிருதத்தைத் தலைமேல் வைத்துக் கொண்டாடிய மொழிநூல் அறிஞர்களான முனைவர் சுநீதிகுமார் (சட்டர்சி), முனைவர் கத்தரே ஆகியோருங்கூடச் சமற்கிருதமொழி எங்கேனும் பேச்சு வழக்கில் இல்லை என்பதை இந்தியத் திணைக் களஞ்சியத்திலேயே ஒப்புக் கொண்டுள்ளனர் என்றாலும் சமற்கிருதம் இன்று பேச்சு வழக்கில் இல்லை என்னுந் தொடரியம், அது பண்டு பேச்சு வழக்கில் இருந்தது என்றும் பொருள்கொள்ள இடந்தருதலால் ஒருவகையில் தவறானதே.

ஆரியக் கூட்டத்தார் நாவலந் தேயத்திற்குள் வந்து வடபுலத்தே வாழ்ந்த திரவிடரிடையே சிறுபான்மையராகக் கலந்து ஒன்றிய நிலையில் அவர்கள்தம் ஆரியம் வழக்கொழிந்துவிட்டது. வடதிரவிடமான பிராகிருதத்தையும் ஒரு கூறாகக் கொண்டு நின்ற ஆரியர்களின் வேதமொழியில் தமிழையும் கலந்து ஆக்கியதே சமற்கிருதம். கூட்டிச் செய்யப்பட்டது என்னும் பொருளிலேயே சமற் கிருதம் என்னும் பெயர் அம் மொழிக்கு அமைந்துள்ளது. அம்மொழி என்றேனும் வழக்கு உற்றதுமில்லை; அற்றதுமில்லை!

வேதமொழி, பிராகிருதம், சமற்கிருதம் ஆகியன வடமொழி என்று பொதுவாகச் சுட்டப்படுதலானும், அவற்றிடையேயான வேறுபாடறியாமையானும் சமற்கிருதமும் சில இடங்களில் ஆரியம் என்றே குறிக்கப்படுதலானும் சிலர் சமற்கிருதத்தைச் செத்தமொழி என்று கூறுகின்றனர். கூறின் அது முன்னை வழக்கில் இருந்ததென்றுங் கொள்ளப்படுதலால், அதனை உயிரற்ற மொழி எனலாமே யன்றிச் செத்தமொழி எனலாகாது. ஒரே வழி அதனைச் செத்தமொழி என்றே கூறினும் அஃது உயிரற்றது எனப் பொருள்படும் இலக்கிய நயம் பற்றியதாகவே கொள்ளப்படும்!

"சமற்கிருதத்தின் நிலைமை படிமையும் பாவையும் போன்றதே என அறிக! அது பிறந்ததுமில்லை; இறந்ததுமில்லை" என்பது மொழிஞாயிறு பாவாணர் தரும் விளக்கம்.

இனித் தாய்மொழி என்பது யாராலும் பயிற்றுவிக்கப்படாமல் பெற்றோரைப் பின்பற்றிப் பிள்ளைகள் தாமாகப் பேசும் இயற்கை மொழி யாதலின், அரைச் செயற்கைக் கலவை மொழியான சமற்கிருதம் யாருக்குமே தாய்மொழியன்று; தாய்மொழியாக இருத்தலும் இயலாது."சமற்கிருதத்தைத் தாய்மொழியாகக் கருதுவார் சிலர் உளராயின், அஃது அவரது மொழிப்பித்த முதிர்ச்சியையே காட்டுகின்றது."

ஆரியப் பார்ப்பனர்கள் தம் குமுகாய மேம்பாட்டைப் போற்றிக் காக்கவே இன்றும் அதில் பல்வேறு படைப்புகளை ஆக்கி வருகின்றனர்; இயன்ற வகையிலெல்லாம் தம் மொழிவெறியையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

சமற்கிருதம் தேவமொழி என்றும், அதிலேயே அனைத்தும் இருப்பதாகவும் நம்பும் கருத்துக் குருடர்களே பெரும்பாலும் இந்திய அரசியலில் ஆளுமை செலுத்துபவர்களாகவும், ஆள்வினை(நிர்வாக)த் துறையில் அதிகாரம் படைத்தவர்களாகவும் தொடர்ந்து வருதலாலும், அதனைத் தட்டிக் கேட்கத் தக்கவர்கள் இன்றளவும் எவரும் இல்லாமையாலுமே பட்டியல் மொழிகளில் ஒன்றாகச் சமற்கிருதம் ஒட்டிநிற்கிறது. அதனை யொட்டியே வானொலி, தொலைக்காட்சி முதலானவற்றில் சமற்கிருதச் செய்தி அறிக்கைகள் இடம்பெறுகின்றன.

சமற்கிருத அறிக்கைகளின் மூலந்தான் செய்திகளை அறியமுடியும் என்ற நிலையில், அம்மொழியையே இயற்கை மொழியாக - தாய் மொழியாகக் கொண்டவர்கள், அம் மொழியை மட்டுமே அறிந்தவர்கள் என்று எவருமே இல்லை; இருக்கவும் முடியாது என்பது வெளிப்படை . ஆகவே உலக வழக்கற்ற ஒரு மொழியில் யார்யார்க்கும் சிறுபயனுமற்ற சமற்கிருதச் செய்தி அறிக்கைகளை வானொலி,

தொலைக்காட்சி முதலான செய்தி நிறுவனங்கள் பெரும்பொருட் செலவில் பரப்புவது முற்றிலும் முறைகேடானது. ஆனாலும் திருக்கோயில் வழிபாடுகளிலும், திருமணம், இறுதிக்கடன் முதலான வாழ்வியல் நிகழ்ச்சிகளிலும் குருக்கண்மாரும், சடங்காசிரியர்களும் ஓதும் சமற்கிருத மந்திரங்களைப் பொருளுணர்ச்சி யின்றியே கேட்டுக் கேட்டு மரத்துப்போனமையால் மேற்கூறிய சமற்கிருதச் செய்தி அறிக்கைகள் பற்றிய முறைகேடு மக்கள் மனத்தை உறுத்துவதில்லை; யாரும் அதைப் பொருட்படுத்துவதுமில்லை!

இனி, வழக்கற்ற மொழியில் உள்ள நூல்களை வருந்தி மனப்பாடஞ் செய்து கற்றல் கடினமானதே யாயினும், அது நாட்டு மக்களுக்கு எவ்வாற்றானும் நற்பயனளிக்காத வறிய முயற்சியாதலின், அதன் பொருட்டுச் சமற்கிருதப் பண்டிதர்கட்குக் குடியரசுத் தலைவர் விருது வழங்குவது கண்டிக்கத் தக்கது; கைவிடச் செய்யப்பட வேண்டியது!

முதன்மொழி என்னும் பெயரில் விருப்பப் பாடமாகப் பள்ளிகளில் தலைநீட்டிய சமற்கிருதத்தைக் கட்டாயப் பாடமாக்கும் முயற்சி எங்கு எவ்வடிவில் நடைபெற்றாலும் அது மோசடி வேலை என்பது ஒருதலை. யாரோ சிற்சிலர் மட்டும் எளிதில் வாய்ப்புகளைப் பெற்று முன்னேறவும், ஏனைப் பெரும்பாலோர் பின்தங்கி ஊக்கங் குன்றவும் வழிவகுக்கும் அத் திட்டம் கட்டாயம் நிறைவேறப் போவதில்லை!

இவ்வாறு பொருளற்றனவும், முறைகேடானவையும், கண்டனத்துக் குரியனவும், கைவிடத் தக்கனவும் பிறவுமான கரணியங்களைக் காட்டிச் சமற்கிருதம் உயிரோடு உலவுவதாகக் கூறிச் சிறுபான்மை யர்க்கான சலுகைகளைப் பெறும் நயப்பாசையுடன் அங்காந்து நிற்கும் சிலர் அந்தோ அளியர்!

இதுகிடக்க, மேற்காட்டியவாறு தீய, பக்க விளைவுகளுக்கும் இடஞ் செய்தலால் வழக்கற்ற சமற்கிருதம் தேசிய மொழிகளின் பட்டியலி லிருந்து நீக்கப்படல் வேண்டும். வானொலி, தொலைக்காட்சி முதலான வற்றின் மூலம் சமற்கிருதச் செய்தி அறிக்கைகளைப் பரப்புவதையும், சமற்கிருதப் பண்டிதர்கட்குக் குடியரசுத் தலைவர் விருது வழங்குவதை யும் அரசு உடனடியாகக் கைவிட வேண்டும். கல்விக்கூடங்களில் எவ்வடிவிலும் சமற்கிருதத்தின் கட்டாய ஆளுமை தவிர்க்கப்படல் வேண்டும்.

இவையெல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தோடு தொடர்புடை யவை, தில்லி யரசைச் சார்ந்தவை என்றாலும் இந்திய அரசாட்சியில் ஆர்வமும், இந்திய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பதில் அக்கறையும் கொண்டுள்ள தமிழ்நாட்டுத் தி. மு. கழக அரசு மேற்கண்டவற்றைச் செயற்படுத்துதற்கு மனம்வைத்து முனைக!

கருத்துக் கணிப்பு "நாடக அரங்கேற்றம்"

-மறவன்புலவு க. சச்சிதானந்தன்-

நான்கு புறமும் வேட்டெஃக (துப்பாக்கி) வீரர்கள் நால்வர். அவர்கள் நான்கு தனித்தனிப் படைகளைச் சேர்ந்தவர்கள். நால்வரின் இலக்குகளும், நடுவே நிற்க முடியாமல், இருக்கமுடியாமல், துவண்டு, நோஞ்சை ஆகி நிற்கின்ற மாந்தர் ஒருவரை நோக்கி வைக்கப் பெற்றுள்ளன.

"எப்பொழுது சுடுவார்கள்? எப்பொழுது என் உயிர் போகும்" என்ற ஏக்கம் அந்த மாந்தருக்கு. இத்தனைக்கும் அந்த மாந்தர் தமது சொந்த நிலத்தில் நிற்கிறார்.

வெள்ளை உடையணிந்த ஒருவர் வருகிறார். உண்டியல் போன்ற பெட்டி ஒரு கையிலே - மற்ற கையிலே தூவல் (பேனா), தாள்.

வேட்டெஃக வீரர்கள் அவரைக் கண்டதும் விலகவில்லை. அங்கங்கேயே நிற்கிறார்கள்.

வெள்ளைச் சட்டை போட்டவர் வீரர்களைப் பார்த்து, "ஐயன்மீர், வணக்கம். உங்கள் இசைவுடன் நீங்கள் குறி வைத்துள்ள மாந்தரோடு பேசப் போகிறேன். இசைவு தருவீர்களா?" என்று கேட்கிறார்.

(அந்த வீரர்கள் நால்வரும் வெவ்வேறு படைகளைச் சேர்ந்தவர்கள். ஆனாலும், ஒருமித்த குரலில், "..ம் பேசும்" என அதிகார வெறியுடன், வேட்டெஃகத்தின் விசையை விரல்கள் நெருக்கிப் பிடித்த நிலையில், கூறுகின்றனர்.

வெள்ளைச் சட்டைக்காரருக்கு அச்சம். நோஞ்சான் மாந்தருக்கு அருகில் போனால், வீரர்களின் விரல்கள் விசையை அழுத்தினால், மாந்தருடன் சேர்ந்து தமது உயிருமன்றோ போய் விடும்?

"வெள்ளைச் சட்டை போட்டிருக்கின்றேனே. அந்த மாந்தரிடம் பேசத் தானே போகிறேன். வீரர்கள் சுட மாட்டார்கள்." அவருக்கு ஓர் அசட்டுத் துணிவு. "போய்த்தான் பார்ப்போம்."

"வெள்ளைச் சட்டை போட்டால் சுடமாட்டேன் என நினைக்காதீர். நடுவில் உள்ள மாந்தர் எங்கள் பிடியில். உமது நடவடிக்கையால் எமது பிடி தளருமானால் முதலில் நீர்! பின்பு அவன்!" இவ்வாறு ஒவ்வொரு வீரனும் தனது மனத்துக்குள்ளே கறுவிக் கொண்டான்.

நடுவில் நின்ற மாந்தர் பார்க்கிறார். "வெள்ளைச் சட்டைக்காரர் வருகிறார்; எனது விடாய்க்கு நீர் தருவார்; பசிக்குச் சோறு தருவார்;

நோய்க்கு மருந்து தருவார்; இந்த நான்கு கிறுக்ர்களிடமிருந்து என்னை விடுவிப்பார்." இவ்வாறு அவர் எண்ணங்கள் ஓடின.

வெள்ளைச் சட்டைக்காரர் திரும்பிப் பார்த்துப் பின்னுக்கு நின்ற ஒளிப்படக்காரரை வருமாறு அழைத்தார்.

வீரர்கள் எச்சரிக்கையுற்றனர். அவர்களுள் ஒருவன் ஒளிப்படக் காரரை நோக்கி வேட்டெஃகத்தை நீட்டினான். ஒளிப்படக்காரர் கையை மேலே உயர்த்தினார். ஒளிப்படக்காரரை அந்த வீரன் முழுவதுமாக நோட்டமிட்டான். ஒளிப்படக்கருவியைத் திறந்து காட்டக் கேட்டான். அவர் கெஞ்ச, வீரன் மிஞ்ச, வெள்ளைச் சட்டைக் காரர் தலையிட்டு, "நான் பொறுப்பாளி. அது ஒளிப்படக்கருவிதான்" என்கிறார்.

வீரன் மீண்டும் நோஞ்சான் மாந்தர் மீது தன் வேட்டெஃகத்தை நீட்டுகிறான்.

ஒருவழியாக இருவரும் மாந்தரை நெருங்குகின்றனர். மாந்தர் ஆர்வத்தோடும், ஏக்கத்தோடும் இருவரையும் பார்க்கிறார்.

வெள்ளைச் சட்டைக் காரருக்கும் மாந்தருக்கும் இடையே உரையாடல் பின்வருமாறு அமைகிறது. முதலில் வெள்ளைச் சட்டைக் காரர் பேசுகிறார்.

"ஐயா உங்களுடைய பெயரென்ன?"

"ஏதோ கேட்டனீரோ? வெடியோசையாலேயும் பசியாலும் எனக்குக் காது கேட்கிறது குறைவு".

உரத்த குரலில் "ஐயா, உங்களுடைய பெயரென்ன?"

"எனக்கு ஆங்கிலமும் தெரியாது. சிங்களமும் தெரியாது. தமிழிலே பேசும்"

தமிழில் - "ஐயா, உங்களுடைய பெயரென்ன?"

"பெயரையோ கேட்டனீர்? என் பெயர் புலவர் பெரியதம்பி".

"அகவை (வயது)?"

"அகவை ஒரு அறுபத்தைந்து ஆகிறது"

"இது உம்முடைய காணியோ?"

"ஓ..., என் அப்பன், என் அப்பனின் அப்பன், அவருடைய தகப்பன், எல்லாரும் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த சரவடிக் காணி".

வீரர்கள் நால்வரில் ஒருவன் சிறிதே இருமுகிறான். மற்றவனின் தொண்டை கரகரக்கிறது. மாந்தர் அந்த வீரர்களைப் பார்க்கிறார். அச்சம், மிரட்சி, ஆனாலும் பேச்சைத் தொடர்கிறார்.

"நான் மறந்து போனன். ஆர் காணி என்றால் என்ன? எல்லாம்

ஒன்றுதான். காணியிலே என்ன இருக்கிறது? பசிக்கிறது. சாகப் போகிறேன். காணியை வேண்டுமென்றால் நீர் எடும்"

"ஐயா, பக்கத்துக் காணி ஆரது?"

"அ்து எங்கள் அளியன் காணிதான். அவன் முல்லை... மணியினது."

"அடுத்த காணி யாருடைது ஐயா?"

"அது மாமா பண்டிதமணியினது. இல்லை, இல்லை. உதுகளெல்லாம் ஆருடையவோ காணிகள். எனக்குப் பேச அச்சமாயிருக்கிறது. உந்தக் கேள்வியெல்லாம் ஏன்?"

வெள்ளைச் சட்டைக்காரர் ஒளிப்படக்காரரைப் பார்த்துப் "படம் எடும்" என்கிறார்.

ஒளிப்படக்காரர் வீரர்களை ஒதுங்கி நிற்கச் சொன்னார். அவர்களும் ஒருவர் மாறி ஒருவராக, மாந்தரில் கண்ணும், விரலில் விசையும் மாறாது ஒதுங்கி ஒதுங்கி நிற்க, அந்த 'உரிமை' மாந்தரை வெள்ளைச்சட்டைக்காரருடனும், உண்டியல் பெட்டி, தாள், தூவலுடனும் சேர்த்துப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்தார்.

"பக்கத்துக் காணிக்காரரோடே சேர்ந்து இருக்கப் போகிறீரோ அல்லது தனியா இருக்கப் போகிறீரோ...?"

"சேர்ந்து இருந்தாலென்ன? தனியே இருந்தாலென்ன? எனக்குப் பசிக்கிறது. என்ன பேசுறது? நீர் போனால் பேர்ந்து நான் ஆள் சரி. இப்போது எனக்கு எல்லாம் சரிதான். பசிக்கிறது. அச்சமாயிருக்கிறது. நீர் கவனமாய்ப் பார்த்துப்போம். வழியெல்லாம் வெடி. இதெல்லாம் இப்போது பேசுகிற புலனமே? எழுபத்தேழிலே தான் கேட்டனம் சொன்னம். புதுதாகச் சொல்ல என்ன இருக்கிறது? நான் மட்டுமே சொன்னேன்? பண்டிதமணி மாமா, முல்லைமணி அளியன் எல்லாரும் ஒன்றாயிருக்கப் போகிறதாக எழுபத்தேழிலே ஒரே நேரத்திலதானே சொன்னனார்கள்."

"ஐயா, நீங்கள் விளக்கமாய்ச் சொல்லுங்கள்"

"எங்களுடைய காணி எங்களுக்கு. மற்றவர்கள் காணி மற்றவர்களுக்கு. எங்களுக்குள்ளே நாங்கள் எப்படி இருந்தாலென்ன. வரம்போ, வேலியோ தேவைக்கும் ஏந்துக்குமாய் நாம் அடைக்கலாம். மற்றப் பகுதியார் ஆண்டு ஆண்டாய்ச் அரக்கி - அரக்கி, வேலியையே எங்களுடைய காணிக்கு நடுவுக்குள்ளே கொண்டுவந்து போட்டுவிட்டு, பேர்ந்து ஆர் காணி இது என்று கேட்டுக்கொண்டு வருகிறீர்கள். தொடர்புடைய நாலு பேரை இங்கே வைத்துக் கொண்டு என்ன கேள்வி கேட்கிறீர்கள். என்ரை தம்பி காட்டுக்குள்ளே போயிருக்கிறான். அவன் வந்த பிறகு பேசுவம். அதுவரைக்கும் என்ன இருக்கிறது மறுமொழி சொல்ல?"

"ஐயா நாங்கள் போய் வருகிறோம். இருட்டுக்கு முந்திப் போய்ச் சேரவேணும்"

"கேட்ட கேள்விக்கு மறுமொழி இப்ப இல்லை என்று எழுதுங்கள்."

வெள்ளைச் சட்டைக்காரரும், ஒளிப்படக்காரரும் படக் கருவி, உண்டியல் பெட்டி, தூவல், தாளுடன் வெளியே வருகின்றனர்.

பொழுது சாய்கிறது. அவர்கள் வேகமாக நடக்கிறார்கள். இருளுக்கு முன் பெட்டியைக் கொடுத்து விடவேண்டும். படத்தையும் கொடுத்து விடவேண்டும்.

போகின்ற வழியில் வெடி ஒன்று வெடிக்கிறது. எங்கிருந்தோ வந்த குண்டு வெள்ளைச் சட்டைக் காரரைத் தாக்குகிறது. பெட்டி சிதற, தாள்கள் பறக்கின்றன. அவர் உயிர் பிரிகிறது. புகைப்படக்காரர் மட்டும் தப்பியோடுகிறார்.

நகரில் மறுநாள் காலை ஒளிப்படத்துடன் நாளிதழ்கள் செய்தி வெளியிடுகின்றன. "பெரியதம்பி ஆதரவு! கருத்துக் கணிப்பு வெற்றி!! போர் நின்றுவிடும்!!! அமைதி திரும்பிவிடும்!!!!"

வீரர்கள் நால்வர் சூழ, நோஞ்சான் மாந்தர் பசியோடும் நோயோடும் உயிருக்குப் போராடிக் கொண்டு, தம் தம்பியை எதிர் பார்த்துக்கொண்டு, நின்ற இடத்திலேயே நிற்கின்றார்.

வெடியோசை ஓயவில்லை.....!

---

22 - ஆம் பக்கத் தொடர்ச்சி

பட்டுக் கிடந்த தமிழகத்தின் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கடந்த இருநூறு ஆண்டுகளாக உலகமெங்கும் பிழைப்புத் தேடி ஓடிக் கொண்டிருக்கின்றனர். அங்கு அடிமைகளாக இழிதொழில் செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குத் தாய்மொழியைப் பேணி வைத்திருக்கும் தாய் நாடாகத் தமிழ்நாடு இன்றும் பெயரளவில் தமிழர் களின் கையிலேயே உள்ளது. ஆனால் இன்று தமிழகம் இருக்கும் பொருளியல் நிலையில் தாங்கள் இருக்கும் இடங்களில் எத்தகைய கொடுமையைச் சந்தித்தாலும் தமிழகத்துக்குத் திரும்பி வருவார்களா? அடிமையிலும் அடிமையாய் உழன்றாலும் உழல்வார்களே யன்றி இந்தப் பாழ்பட்ட மண்ணுக்குத் திரும்ப மாட்டார்கள். எனவே தமிழகம் தமிழ் மொழி பேசும் மக்களின் தாயகமாக நிலைத்திருக்க வேண்டுமாயின் இங்குள்ள மக்கள் வயிறார உண்டு வாழும் அளவுக்குப் பொருளியல் வளர்ச்சியை ஏற்படுத்தியாக வேண்டும். ஆனால் ஒட்டுண்ணி வாழ்க்கை வாழும் அறிஞர்களுக்கும் இயக்கத் தலைமைகளுக்கும் இந்தப் பொருளியல் அடிப்படை விளங்கவில்லை என்பதுதான் மறுக்கம். இதனை மொழி முதன்மைக் கோட்பாட்டினர் புரிந்து கொள்ள வேண்டும்.

நூல் அறிமுகம்

குடிசையும் கோபுரமும்:

ஆசிரியர்: முனைவர் திருக்குறள் **சி. இராமக்கிருட்டிணன்** (மேனாள் நடுவர்); வெளியீடு: கரிகாலன் பதிப்பகம், 'திருக்குறள் இல்லம்', 16 காரணீசுவரர் கோயில் முதல் தெரு, மயிலை, சென்னை - 600 004. விலை: உரு. 60.00.

"திருக்குறள் நெறிகள் அடிப்படையில் சாதிவேறுபாடற்ற சமநிலைக் குமுகம் அமைய வேண்டிய நோக்கில் எழுதப்பட்ட புதின நூல் இது".

பேராசிரியர் பார்வையில் பெருஞ்சித்திரனார்:

தொகுப்பு ஆசிரியர்: முனைவர் **கடவூர் மணிமாறன்,** வெளியீடு: விடியல் வெளியீட்டகம், 109 மேலைத்தெரு, கிருட்டிணராயபுரம் - 639 102, கரூர் மாவட்டம். விலை: உரு. 20.00.

"பாவலரேறு, கலைஞர், பேராசிரியர் ஆகியோர் ஒருவருக்கொருவர் எத்தகைய கருத்தினைக் கொண்டிருந்தனர் என அரங்குகளில் மணந்த ஆறு பொழிவுகள் இந்நூலில் காலத்தின் தேவை கருதித் தென்றலாய்ச் சிலிர்த்து உலா வருகின்றன".

புதிய தமிழ் இயக்கம்:

ஆசிரியர்: புலவர் **ப. சாத்தன்** க.மு., வெளியீடு: அன்றில் பதிப்பகம், 25 சி.என்.கே. சாலை, சேப்பாக்கம், சென்னை - 600 005. விலை: உரு. 40.00.

"பல பொருள்கள் பற்றிப் பாடிய செய்யுள்களின் ஒரு தொகுதி - காலத்தின் தேவையையொட்டி - 'புதிய தமிழியக்கம்' - எனும் பெயரில் வந்திருக்கிறது".

சிந்தனை முத்துகள்:

ஆசிரியர்: பாமாமணி **து. வெள்ளமுத்து** க.மு., கல்.மு., வெளியீடு: கலையறிவுப் பதிப்பகம், 154. கம்பன் தெரு, காவிரி நகர், குளித்தலை - 639 104, கரூர் மாவட்டம்.விலை: உரு. 25.00.

"பல சூழல்களின் பல கட்டுரைகள் அனைத்தையும் ஒன்றாகத் தொகுத்து நூல் வடிவம்".

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் தொகுப்பாகத் தேவையா?

அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகளாக வெளிவருகின்ற நம் அரும்பெறல் ஐயா அவர்களின் தென்மொழி இதழ், தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்கள் யாவும் விலையில் கட்டடம் செய்யப் பெற்று **மிகக் குறைவான** - சலுகை விற்பனைக்கு உள்ளன.

அன்பர்கள், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பதிப்பகங்கள், நூலகங்கள் மற்றும் பிறர் அனைவரும் இந் நல்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறோம். இதழ்களின் விற்பனை விளத்தங்கள் யாவும் கீழ்வருமாறு கொடுக்கப் பெறுகின்றன.

தென்மொழி		**விலை.**
1. தொகுப்பு - 1	(சுவடி: (6 முதல் 14 முடிய) (இல்லாத இதழ்கள் தவிர்த்து)	8.00
2. தொகுப்பு - 2	(சுவடி: 11 முழுமையாக)	8.00
3. தொகுப்பு - 3	(சுவடி: 12 முழுமையாக)	8.00
4. தொகுப்பு - 4	(சுவடி: 13) (இல்லாத இதழ்கள் தவிர்த்து)	8.00
5. தொகுப்பு - 5	(சுவடி: 15 - ")	8.00
6. தொகுப்பு - 6	(சுவடி: 16 - ")	8.00
7. தொகுப்பு - 7	(சுவடி: 17,18 ")	8.00
8. தொகுப்பு - 8	(சுவடி: 19 ")	8.00
9. தொகுப்பு - 9	(சுவடி: 20 ")	8.00
10. தொகுப்பு - 10	(சுவடி: 21) (முழுமையாக)	13.00
11. தொகுப்பு - 11	(சுவடி: 22) "	13.00
12. தொகுப்பு - 12	(சுவடி: 23) "	16.00
13. தொகுப்பு - 13	(சுவடி: 24) "	16.00
14. தொகுப்பு - 14	(சுவடி: 25) "	17.00
15. தொகுப்பு - 15	(சுவடி: 26) "	20.00
16. தொகுப்பு - 16	(சுவடி: 27) "	50.00
17. தொகுப்பு - 17	(சுவடி: 28) "	53.00

தமிழ்ச்சிட்டு

			விலை.
1.	தொகுப்பு - 1	(குரல்: 1 - 13 முடிய) (இல்லாத இதழ்கள் தவிர்த்து)	9.00
2.	தொகுப்பு - 2	(குரல்: 14 - 16 முடிய) (இல்லாத இதழ்கள் தவிர்த்து)	11.00
3.	தொகுப்பு - 3	(குரல்: 17 - 18 முடிய) (இல்லாத இதழ்கள் தவிர்த்து)	11.00
4.	தொகுப்பு - 4	(குரல்: 19 - 20 முழுமையாக)	12.00
5.	தொகுப்பு - 5	(குரல்: 21 - 22 முடிய) (இல்லாத இதழ்கள் தவிர்த்து)	33.00

தமிழ்நிலம்

		விலை.
1.	இதழ் எண்: 1 முதல் 80 முடிய	50.00
2.	இதழ் எண்: 81 முதல் 110 முடிய	30.00
3.	இதழ் எண்: 111 முதல் 140 முடிய	35.00
4.	இதழ் எண்: 141 முதல் 174 முடிய	50.00

தமிழ்நிலம் முழுமையான தொகுப்பு பெறும் அன்பர்கள் உரு. 100/- மட்டுமே அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

அஞ்சல் செலவுகள் தனி. பதிவஞ்சலில் பெற அஞ்சல் செலவுடன் மேலும் உருபா. 10(பத்து) மட்டும் சேர்த்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அமைச்சர்
'தென்மொழி'
சென்னை - 5.

வெளிவரவுள்ளது!

திபி. 2029-க்கான

தென்மொழி நாள்காட்டி

அழகிய வண்ணப்படத்துடன் தமிழ் ஆண்டு நாள்காட்டி பாவலரேறு ஐயா அவர்களின் பாடல் வரிகளுடனும் முகாமையான குறிப்புகளுடனும் அணியமாகிக் கொண்டுள்ளது.

கூடுதல் படிகளின் தேவைக்கு முன்கூட்டி எழுதவும்.

விலை உரு. 15 மட்டுமே

- அமைச்சர், தென்மொழி.

நூல் நிறை

எழுத்துச் சீர்திருத்தம் - ஓர் ஆய்வு

[ஆசிரியர்: மு. இறைவிழியன், வெளியீடு: இறைவன் பதிப்பகம், 36, இரண்டாந்தெரு, கம்பன் நகர், இ. பாளையம் (அஞ்.) புதுச்சேரி 600 010. விலை: உரு. 10.00]

தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய இந்நூல் தெள்ளிய நடையில் திறம்பட எழுதப்பட்டுள்ளது. எழுத்துச் சீர்திருத்தம் வேண்டுவார் கூறும் தொண்வகைக் கரணியங்களும், அவர்கள் சீர்திருத்தம் எனக் கூறும் எண்வகை மாற்றங்களும் வரிசைப்படுத்தப்பட்டு அவற்றைப் பற்றிய ஆய்வுரையும் தீர்வும் வரையப்பட்டுள்ளன.

தமிழ் நெடுங்கணக்கில் எழுத்துகள் - வரிவடிவங்கள் மிகுதி என்பார்க்குப் பிறமொழி எழுத்துவடிவங்களோடு ஒப்பிட்டுக் காட்டித் தமிழ் எழுத்து வடிவங்கள் குறைவே எனத் தெளிவுபடுத்தியுள்ளார் ஆசிரியர். இகர ஈகார வரிசையிலும் உகர ஊகார வரிசையிலும் இப்பொழுதுள்ள வரிவடிவங்களை விட எளிமையாக எந்த வல்லுநராலும் எழுதமுடியாது என்றும், ஐகார ஔகாரங்களை நீக்குவதால் பெரும்பயனில்லை என்றும், கிரந்த எழுத்துகளை ஏற்றலாகாது என்றும் பதியக் கூறியிருப்பதும் இன்னபிறவும் பாராட்டத்தக்கன.

ஆங்கிலத்திலுள்ள 'F' என்னும் எழுத்தின் ஒலிக்காகச் சிலர் ஆய்தத்தைப் பயன்படுத்துவது தவறு என்று சுட்டிக் காட்டியிருப்பதோடு பன்னூறு ஆண்டுகளாகப் புதுச்சேரியில் உள்ளவர்கள் பிரான்சு என்றே எழுதிவரினும், அதனால் ஏதும் கெட்டுவிடவில்லை என்று ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப்பது நன்று. இனி, உயிரெழுத்து வரிசையில் அ, இ, உ என்பவற்றை யடுத்து அகரக்கூறும் இகரக்கூறும் சிறிதே ஒத்திசைக்கும் எகரமும் அவை மிகுதியும் ஒத்திசைக்கும் ஐகாரமும், அகரக்கூறும் உகரக்கூறும் சிறிதே ஒத்திசைக்கும் ஒகரமும் அவை மிகுதியும் ஒத்திசைக்கும் ஔகாரமும் வைக்கப்பட்டுள்ள என்னும் சிவஞான முனிவரின் கருத்து, இந் நூலாசிரியரின் ஐகார ஔகார இருப்புப் பற்றிய விளக்கத்துக்கு வலுச் சேர்க்கும் என்பதையும், 'ஈ' என்னும் வரிவடிவம் 'இ' என்பதன் திரிபே யாதலால் அதனை மாற்ற வேண்டும் என்பது மொழிஞாயிறு பாவாணர் கருத்து; அதனையே அவர் கையாண்டதோடு அவர்தம் நூல்கள் சிலவற்றில் அச்சிட்டும் காட்டியுள்ளார்; கணிப்பொறி வந்துவிட்ட இற்றை நிலையில் அது மிகவும் எளிதானது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

நூல் வடிவத்தால் சிறிதாயினும் கருத்துச் செறிவுடையது.

- செம்பி

செய்திகள்

பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ்ப்பணிமன்றம்!

புதுக்கோட்டை மாவட்டம் வயலோகம் பாவலரேறு பெருஞ் சித்திரனார் தமிழ்ப்பணி மன்றத்தின் சார்பில் தி.பி. 2028 துலை 18 காரி (18.10.1997) அன்று மாவட்ட அளவில் மேனிலைப் பள்ளி மாணவர்களுக்கான படைப்பாற்றல் போட்டிகள் இலுப்பூர் உயர்நிலைப் பள்ளியில் நடத்தப்பட்டன. பா, கட்டுரை, உரைவீச்சு முதலான போட்டிகளில் இருநூறுக்கு மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். தமிழக மாந்தவுரிமைக் கழக நிறுவனர் திரு. அரங்க. குணசேகரன் நடுவர் பொறுப்பேற்றார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு நூல்களும் அனைவர்க்கும் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன என்று மன்றத் தலைவர் சுதாகர் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலவழி மழலையர் பள்ளிகளுக்கு ஏற்பிசைவு அளித்ததை எதிர்த்துப் பட்டினிப் போராட்டம்!

ஆங்கிலவழி மழலையர் பள்ளிகளுக்குத் தமிழ்நாட்டரசு ஏற்பிசைவு (அங்கீகாரம்) அளித்ததைக் கண்டித்து, தி.பி. 2028 துலை 2 ஞாயிறு (19.10.97) அன்று, சென்னை - சைதை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் 35 அமைப்புகளின் சார்பில் தமிழ் அறிஞர்கள், அன்பர்கள் பட்டினிப் போராட்டம் நடத்தினர். தலைநகர்த் தமிழ்க் கழகம் இக் கண்டன அறப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது.

'நல்லாசிரியர்' ச. இலக்குமணன் வாழ்க!

தென்மொழி ஆர்வலரும் - பாவலரேறு ஐயா அவர்கள்பால் பேரன்பு பூண்டவருமான நெல்லை ச. இலக்குணன் அவர்கள் இவ்வாண்டு 'நல்லாசிரியர்' விருது பெற்றுள்ள செய்தி அறிந்து மகிழ்கிறோம். தமிழிலக்கியங்களில் சிறந்த புலமையும் 'தென்மொழி' வளர்ச்சிப் பணிகளில் அக்கறையும் கொண்ட நல்லாசிரியர் ச. இலக்குமணன் நீடுவாழ்க!

திருச்சி மகிழ்நன் இல்லத் திருமணம்

நெடுநாள் தென்மொழி ஆர்வலரும் பாவலரேறு ஐயர் அவர்கள்பால் பேரன்பு கொண்டவருமான திருச்சி - கயிலாசபுரம் திரு. நாரா. மகிழ்நன் (நித்தியானந்தம்) - இரேணுகா மகள் செல்வி நறுங்குழலிக்கும், சென்னை-மகாகவி பாரதிநகர் திரு.க. கிருட்டிணன் - சுசீலா மகன் செல்வன் பாற்கரனுக்கும் தி.பி. 2028 துலை 5 அறிவன் (22.10.1997) அன்று சென்னை-இராயபுரத்தில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் நீடுவாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

-ஆசிரியர்

தென்மொழி அச்சகம், சென்னை - 600 005. (தொலைபேசி : 854 7829)